# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 6

(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**
info@nie.lk

# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 6

**(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**
**info@nie.lk**

**கர்நாடக சங்கீதம்**
தரம் - 6
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு : 2014

தேசிய கல்வி நிறுவகம்
ISBN

அழகியல் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

***பதிப்பு:***
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# பாட அறிமுகம்

வளர்ந்து வரும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப சமூகத்திலும் பல மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதற்கிணங்க பாடசாலைக் கலைத்திட்டத்திலும் மாற்றியமைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அந்த வகையில் தற்கால தேவைகளிற்கமைய பாடசாலைக் கலைத்திட்ட மானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது என்பது கல்வியலாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

இசைக்கலையானது நடைமுறையில் உள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெறுகின்றது. இசையைக் கற்பதால் மாணவரிடையே உள்ளத்தில் காணப்படும் இரசித்தல் திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன் என்பன வெளிக்கொணரப்படுவதுடன் ஒருவரின் சமநிலை ஆளுமை வளர்ச்சிக்கு இத்திறன்கள் யாவும் விருத்தி செய்யப்படல் அவசியமாகும்.

அன்பு, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு பிறரை மதித்தல் சகோதரத்துவம் பிறநாட்டு இசைகளையும், மக்களின் உணர்வுகளையும் மதிக்கும் பண்பு போன்ற நற்குணங்களை கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் இசை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இரசித்தல் ஆகத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசார பின்னணி ஆகியவற்றின் கற்றல் பேறு அடைவதற்கான கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டத்தின் வடிவமைப்பிற்கமைய 2015 ஆம் ஆண்டு தரம் 6, 10 இற்கான கர்நாடக சங்கீத புதிய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மாணவர்கள் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களிற்கு ஏற்றவாறு கற்றற்பேற்றை அடைவதற்காக மாணவர்களிடம் உள்ள இயற்கையாக உள்ள திறன்களை உபயோகித்து கற்றல் கற்பித்தல் அணுகுமுறையும் செயற்பாடுகளும் அமையும் முறை, மிகவும் முக்கியமானதாகும்.

பணிப்பாளர்
அழகியற் கல்வித்துறை
தேசியகல்வி நிறுவகம்
மஹரகம.

| | | |
|---|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்** | **-** | கல்விசார் அலுவல்கள் சபை |
| **செயற்றிட்ட இணைப்பாளர்** | - | செயற்திட்ட அதிகாரி<br>ஞானஸ்ரீ B. கமகே<br>விரிவுரையாளர்<br>அழகியற்கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவம் |

**எழுத்தாளர் குழு**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வை. கணேசலிங்கம் | - | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு. |
| 2. | திருமதி. வி. நாகேஸ்வரன் | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம். |
| 3. | திருமதி. க. ஜெயபாலசிங்கம் | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். |
| 4. | திருமதி. க. ஸ்ரீஸ்கந்தராஜா | - | ஆசிரிய ஆலோசகர்<br>வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு. |
| 5. | திருமதி. இ. சண்முகலிங்கம் | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு. |
| 6. | செல்வி. க. சந்திரிக்கா | - | ஆசிரியர்<br>யா/சென்ற் ஆன்ஸ் கல்லூரி<br>மானிப்பாய் |
| 7. | திரு. அ. கிருஷ்ணானந்தன் | - | ஆசிரியர்<br>யா/ஹாட்லிக் கல்லூரி<br>பருத்தித்துறை |
| 8. | திருமதி. ம. கலைவாணி | - | உதவிக் கல்விப்பணிப்பாளர்<br>வலயக்கல்வி அலுவலகம், கண்டி. |

| | | |
|---|---|---|
| **அட்டை வடிவமைப்பு** | - | திரு. ரவீந்திர தேநுவர |
| **மொழி மேற்பார்வை** | - | திரு. து. ராஜேந்திரம்<br>சிரேஸ்ட விரிவுரையாளர் கல்விப்பீடம் (ஓய்வு)<br>திறந்த பல்கலைக்கழகம் |
| | - | திருமதி. யூ. விவேகானந்தன்<br>ஆசிரியர், திக்ஒய வித்தியாலயம், திக்ஒய |

# ஆசிரியர் வழிகாட்டி பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 6 இற்கான கர்நாடக சங்கீத பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்கு துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனை பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கமைவாக நேர முகாமை செய்தல்.

❖ 5 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறை தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்த தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டு செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

❖ தாமே செயற்பாடுகளை செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனமெடுப்பது பயனுடையதாகும்.
   ➢ அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்வைப் பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரை பாடத்தின் பால் ஈர்த்தல். முன்னநிலை மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
   ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலை கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
   ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள் ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்த பாடத்தை நிறைவு செய்தல்.
   ➢ இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செழுமைப் படுத்திக் கொள்ளலாம்.

❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

❖ பின்வரும் அட்டவணையிற் குறிப்பிட்டவாறு மூன்று தவணைக்குரிய செயற்பாட்டினை வகுப்பறையில் நடைமுறைப்படுத்துக.

| **தவணை 1** | **தவணை 2** | **தவணை 3** |
|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் : 1.1.1, 2.1.1, 3.1.1, 3.2.1, 3.3.1, 4.1.1, 4.1.2, 5.1.1, 5.1.2 | செயற்பாட்டு இலக்கம் : 1.2.1, 2.2.1, 3.4.1, 3.5.1, 3.6.1, 4.1.4, 4.1.5, 5.1.3 | செயற்பாட்டு இலக்கம் : 1.2.2, 2.3.1, 3.7.2, 3.8.1, 3.9.1, 3.10.1, 4.1.6, 4.1.6, 4.1.7, 5.1.4 |

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| அறிமுகம் | v |
| பாடத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vii |
| **உள்ளடக்கம்** | viii |
| பாடத்திட்டம் | ix - xviii |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | |
| **தவணை I** | 01 - 19 |
| **தவணை II** | 20 - 32 |
| **தவணை III** | 33 - 50 |
| ஏனைய உதவிகள் | 51 |

# பாடத்திட்டம்

## அறிமுகம்

நடைமுறையிலுள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் கர்நாடக சங்கீதமும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இடைநிலை வகுப்புக்களில் இப்பாடத்தைத் தெரிவு செய்து கற்கும் கணிசமான மாணவர்கள் உளர். இரசனையையும், ஆக்கத்திறனையும், ஆற்றுகையையும் வெளிக்கொணரக்கூடிய, கர்நாடக சங்கீத பாடத்தினூடாக நிறைவு செய்யப்படும். சமூகப்பணி குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் ஒருவரின் ஆளுமை வளரச்சிக்குக் கர்நாடக சங்கீத அறிவு இன்றியமையாததாகும். 2012ஆம் ஆண்டு பாடத்திட்ட மறுசீரமைப்பின் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

- நடைமுறையிலுள்ள தேர்ச்சியும் தேர்ச்சிமட்டமும்.
- கர்நாடக சங்கீதம் கற்பிக்கின்ற ஆசிரியர்களிடம் பெறப்பட்ட கருத்துக்கள்.
- பரீட்சையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள்.

நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்திலுள்ள சில பாடப் பகுதிகளைக் குறித்த பாடவேளைகளில் நிறைவு செய்ய முடியாத குறைபாடு கர்நாடக சங்கீதம் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், வளவாளர்கள், விரிவுரையாளர்கள் என்போராற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கமைவாக, சில பாடப்பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இப்பாடத்துக்குரிய ஐந்து தேர்ச்சிகளிலும் இதுவரை இருந்த செயற்பாடுகளிற் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, செய்முறை விடயங்களில் உள்ள சில உருப்படிகளிற்குப் பதிலாகப் புதிதாகச் சில உருப்படிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களிற்கு ஸ்வரஞானத்தை ஏற்படுத்துவதற்காக ஸ்வரக் கோர்வைகளை ஆக்கிப்பாடும் பாடப்பகுதி ஆக்கத்திறன் விடயத்திற் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிமுறை தொடர்பான தேர்ச்சியுடன் இதுவரை காலமும் உள்ளடக்கப்பட்டிருந்த வாக்கேயகாரர் சரித்திரம் என்ற பகுதி கலாசாரப் பின்னணி என்ற தேர்ச்சிக்கே பொருத்தமாக அமைவதால் அத்தேர்ச்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தரம் 6 - 9 வரையான வகுப்புக்களில் கர்நாடக சங்கீத்திற் கற்றுக்கொண்ட விடயங்களை மாணவர்கள் தரம் 10, 11 இலும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளுடாகக் கர்நாடக சங்கீதம் பாடதினைக் கற்றுக்கொள்ள ஊக்கமளித்தல் விரும்பத்தக்கதாக எதிர்பார்க்கப்படும் பாட அடைவினை மாணவர் பெற்றுக் கொள்வதற்கு இப்பாடத்திட்டம் உதவும் என நம்புகிறோம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலம் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

   எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

   எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

   சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

   தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

   இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

   சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

   உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

   பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## பாடக் குறிக்கோள்கள்.

1. கர்நாடக சங்கீதம் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வார்.
2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
3. படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.
5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவர்.
6. சிறந்த இசைக் கலைஞராக விளங்குவதற்கான சமநிலை ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

## கர்நாடக சங்கீதம் - தரம் 6

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார். | 1 . 1 அன்றாட வாழ்வில் நாம் கேட்கும் இசையை இனங்கண்டு இரசிப்பார். | • சூழலில் கேட்கும் இசை<br>- வீட்டுச் சூழல்<br>- பாடசாலைச் சூழல்<br>- பறவைகள், மிருகங்கள்<br>- இயற்கை ஒலிகள்.<br>உ-ம் : அருவி ஓசை, காற்று, மழை, கடலலை ஓசை. | • சூழலிற் கேட்கப்படும் இசையை இனங்காண்பார்.<br>• இசையை அவதானித்துக் கேட்டுக் கிரகிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.<br>• ஒலி வேறுபாடினை அறிந்து அதேபோன்று செய்து காட்டுவார். | 02 |
| | 1 . 2 வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசையை இரசிப்பார். | • வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசை<br>- குழந்தைப் பருவம்<br>உ-ம் : மருத்துவிச்சிப் பாடல், தாலாட்டுப் பாடல்,<br>• வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசை<br>- வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசை வளர்த்தோர் பருவம்<br>- ஊஞ்சற் பாடல்<br>- விளையாட்டுப் பாடல்.<br>இவற்றின் தனித்துவமான அம்சங்கள் (இசை, கருத்து, உணர்ச்சி, சொற்பிரயோகம் தாளம்) | • குழந்தைப் பருவப் பாடல்களை அவதானித்துக் கேட்டு இரசிப்பார்.<br>• வளர்ந்தோர் பருவப் பாடல்களை அவதானித்துக் கேட்டு இரசிப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். | 2.1 புத்தளிப்புக் கருவிகளை ஆக்கி இசைப்பார். | • புத்தளிப்புக் கருவிகள்<br>– சோடா மூடிச் சல்லாரி<br>– லய வாத்தியத்துக்குரியவை<br>- துளை வாத்தியத்துக்குரியவை<br>• பொருட்கள் சேகரித்தல்.<br>• கருவிகளை ஆக்குதல்.<br>• பல்லிய இசை நிகழ்வாக்கல்<br>- தயாரித்த புத்தளிப்புக் கருவிகளைக் கொண்டு பல்லிய இசை நிகழ்வை ஆக்குதல். | • சூழலிற் கிடைக்கும் பொருள்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவிகளைச் செய்வார்.<br>• செய்த இசைக்கருவிகளைக் கொண்டு பல்லிய இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்துவார். | 0 4 |
| | 2.2 தத்தம் இயல்பிற்கேற்ப பாடல்களை ஆக்கி அபிநயிப்பார். | • பாடல் ஆக்கம், இசையமைப்பு<br>• கருத்திற்கேற்ப அபிநயித்தல். | • சிறிய பாடல்களை ஆக்குவார்.<br>• பாடல்களுக்கு இசையமைப்பார்.<br>• பாடல்களை அபிநயிப்பார். | 0 3 |
| | 2.3 இசை தொடர்பான தேடல்களை முன்வைப்பார். | • இசை தொடர்பான வெளிக்களப் புத்தகம் தயாரித்தல்.<br>- இசைக்கருவிகள்.<br>- இசைக் கலைஞர்கள். | • இசை தொடர்பான வெளிக்களப் புத்தகம் தயாரிப்பார். | 0 2 |
| 3.0 இசை உருப்படிகளை சுருதி இராகத்துடன் பாடுவார். | 3.1 சிறுவர் பாடலைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார். | • இசை பயில்வோம் சுருதி லயமுடனே<br>- சிறுவர் பாடல் இராகம்<br>- சங்கராபரணம் | • பாடல் மூலம் சங்கராபரண ஸ்வரஸ்தானங்களை அறிந்து வெளிப்படுத்துவார்.<br>• சங்கராபரண இராகத்திலுள்ள பாடல்களைத் தாளத்துடன் பாடுவார். | 0 5 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3..2 தேசிய கீதத்தைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார். | • "ஸ்ரீலங்கா தாயே" | • தேசிய கீதம் நாட்டின் பெருமையைக் கூறும் பாடல் எனக் குறிப்பிடுவார்.<br>• தேசிய கீதத்தை முறைப்படி பாடுவார். | 0 5 |
| | 3..3 நாட்டார் பாடலைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார். | • "மண்ணை நம்பி உழுது வைச்சு" | • நாட்டார் பாடலை சுருதி இராக தாளத்துடன் பாடுவார். | 0 5 |
| | 3..4 சிறுவர் பாடலை இராக தாளத்துடன் பாடுவார். | • "கண்ணன் புரிந்த லீலை" இராகம்-காபி-தாளம்-சதுஸ்ர ஏகம். | • சிறுவர் பாடலை இராக தாளத்துடன் பாடுவார். | 0 5 |
| | 3..5 பாடசாலைக் கீதத்தை இராக தாளத்துடன் பாடுவார். | • பாடசாலைக் கீதம் | • பாடசாலைக் கீதம் மூலம் பாடசாலையின் பெருமையைக் குறிப்பிடுவார்.<br>• பாடசாலைக் கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களை கூறுவார்.<br>• பாடசாலை கீதத்தைப் பாடுவார். | 0 5 |
| | 3.6 தேவராத்தினை பண்முறையுடன் பாடுவார். | • தோடுடைய செவியன் - பண் - நட்டபாடை தாளம் - ரூபகம் | • தேவாரத்தைப் பண் முறைக்கேற்பத் தாளத்துடன், பக்தி உணர்வோடு பாடுவார். | 0 5 |
| | 3.7 அப்பியாச உருப்படிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார். | • ஸ்வர வரிசை 1 - 2 இசைப் பயிற்சி | • மாயாமாளவ கௌளை இராகத்தில் ஸ்வர வரிசையைச் சுருதி, தாளத்துடன் பாடுவார். | 0 2 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.8 சிறுவர் பாடலைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார். | • அன்பு நிறைந்த பாட்டி இராகம் - தோடி தாளம் - சதுஸ்ர ஏகம் | • பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.<br>• கதையின் மையக் கருத்தினை உணர்ந்து கொள்வார். | 0 5 |
| | 3.9 தமிழ் மொழி வாழ்த்துப் பாடலைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார். | • "வாழ்க நிரந்தரம் " | • தமிழ் மொழியின் சிறப்பினைக் கூறுவார்.<br>• பாடலை இராக தாளத்துடன் பாடுவார். | 0 5 |
| | 3.10 நாட்டார் பாடலை சுருதி, உரிய மெட்டு, தாளத்துடன் பாடுவார். | • லக்கை லலக்கை | • நாட்டார் பாடலை நாட்டார் மெட்டில் பாடுவார். | 0 5 |
| 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். | 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். | • அரும்பத விளக்கம்<br>- சங்கீதம்<br>- நாதம்<br>- சுருதி<br>• அரும்பத விளக்கம்<br>– ஸ்வரம்<br>- ஆரோஹணம் அவரோஹணம்<br>• அரும்பத விளக்கம்<br>- தாளம்<br>- திஸ்ர, சதுஸ்ர நடைகள் | • இசையின் அடிபபடை அம்சங்களைக் கூறுவார்.<br>• சங்கீதம், நாதம், சுருதி பற்றி விளக்குவார்.<br>• ஸ்வரம், ஆரோகண, அவரோகணம் பற்றி விளக்குவார்.<br>• தாளம் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப் படுத்துவார்.<br>• திஸ்ர, சதுஸ்ர நடையினை விளக்குவார். | 1 9 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக, கலாசார, பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார் | 5.1 சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சங்களை வெளிக்கொணர்வார். | • தைப்பொங்கல் தொடர்பான கலை அம்சங்கள்.<br>• புதுவருடப் பிறப்பு தொடர்பான கலை அம்சங்கள்.<br>• வெசாக், றமழான் தொடர்பான கலை அம்சங்கள்.<br>• நத்தார் தொடர்பான கலை அம்சங்கள். | • வெவ்வேறு பண்டிகையின் கலை அம்சங்களை இனங்காண்பார். | 08 |

# கற்றல் கற்பித்தல் முறைகள்

## 1ம் தவணை (இரசித்தல்)

**தேர்ச்சி** : 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.1 அன்றாட வாழ்வில் நாம் கேட்கும் இசையை இனங்கண்டு இரசிப்பார்.

**செயற்பாடு** : 1.1.1 சூழலில் கேட்கும் இசையை இரசிப்போம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- சூழலில் கேட்கப்படும் இசையை இனங்கண்டு கூறுவார்.
- இசையை அவதானித்துக் கிரகிக்கும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- ஒலி வேறுபாட்டினை அறிந்து அதேபோன்று செய்து காட்டுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 1.1.1.1 :**
- வீட்டுச் சூழலிலும், பாடசாலைச் சூழலிலும் (பறவைகள், மிருகங்கள்) கேட்ட ஒலிகள் தொடர்பாக மாணவர்களிடம் வினவுதல்.
- அந்த ஒலிகளை மாணவர்கள் தாமே வெளிப்படுத்தத் தூண்டுதல்.
- சூழலில் கேட்கப்படும் ஒலிகளை ஒலிப்பதிவுநாடா மூலம் செவி மடுக்கச் செய்து அவ் ஒலிகளை இனங்கண்டு கூற வழிப்படுத்தல்.
  உதாரணம்: பறவைகள் மற்றும் மிருகங்களின் ஒலிகள், மணியோசை, வாகனங்களின் சத்தம் போன்றவை.
- பின்வரும் விடயங்களை வலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துதல்
- நீண்டதூரம் கேட்கப்படும் ஓசை நாதஸ்வரத்தின் ஓசை, குழலோசை, மணியோசை. தவில் ஓசை, பறை ஓசை, குறுகிய ஓசைக்கு உதாரணமாக இருமும் ஒலி, கதைக்கும் ஒலி என்பவற்றைக் கூறுதல்.

**படி 1.1.1.2 :**
- மாணவர்களை வகுப்பறையை விட்டு வெளிச் சூழலுக்கு அழைத்துச் செல்லுக.
- 5 நிமிடம் அமைதியாக இருக்குமாறு ஆற்றுப்படுத்துக.
- ஒருமித்த மனநிலையில் சூழலில் கேட்கப்படும் இசையை அவதானித்து இரசிக்கச் செய்க.
- செயற்பத்திரத்தை வழங்குதல்

**படி 1.1.1.3 :**
- மீண்டும் வகுப்பறைக்கு அழைத்து வந்து அவதானித்த ஒலிகளை முன்வைப்புச் செய்தல்.
- மாணவர் சூழலில் இனங்கண்டு இரசித்தவற்றை அடிப்படையாகக் கொண்டு

கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாடசாலைச் சூழலில் கேட்ட ஒலிகளைக் கிரகித்து வெளிப்படுத்துவார்.
- சூழலில் கேட்கப்படும் ஒலிகளை இனம் காண்பார்.
- ஒலிவேறுபாட்டினைக் கிரகித்து அதேபோன்று செய்து காட்டுவார்.

**செயற்பத்திரம்**

- பாடசாலைச் சூழலில் கேட்கும் ஒலிகளை அவற்றின் தன்மையின் அடிப்படையில் பட்டியற்படுத்துக.

**தேர்ச்சி** : 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.1 புத்தளிப்புக் கருவிகளை ஆக்கி இசைப்பார்.

**செயற்பாடு** : 2.1.1 ஒலி எழுப்பக்கூடிய புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** :
- புத்தளிப்புக் கருவிகளின் மாதிரிகள்
- செயற்பாட்டுக்காக மாணவர் கொண்டு வரும் பொருட்கள் (சோடாமூடி, தகரம், புளியங்கொட்டை, கம்பி, சிரட்டை, XRay தாள்)

**கற்றற் பேறுகள்** :
- சூழலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 2.1.1.1 :**
- சூழலில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படும் கருவிகளே புத்தளிப்புக்கருவிகள் எனக் கூறுதல்.
- புத்தளிப்புக் கருவிகள் ஆக்கப்பயன்படும் பொருட்கள் பற்றிக் கூறுதல்.
- சல்லாரி, மேளம் போன்ற கருவிகளின் மாதிரிகளைக் காட்டுதல்.

**படி 2.1.1.2 :**
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி மாணவர்களால் கொண்டு வரப்பட்ட பொருட்களைப் பயன்படுத்தி புத்தளிப்புக் கருவிகள் ஆக்குவதற்குப் நெறிப்படுத்துக.
- குழுக்களாக மாணவர்கள் சரியாகச் செய்யுமாறு அறிவுறுத்தி வழிகாட்டுதல்.

**படி 2.1.1.3 :**
- மாணவர்களின் புத்தளிப்புக் கருவி ஆக்கச் செயற்பாட்டினை மீளவலியுறுத்தி, ஒரு பாடலைப் பாடவும் அனைத்துக் கருவிகளையும் இசைக்கவும் சந்தர்ப்பம் கொடுத்தல்.
- ஒரு பாடலைப் பாடவும் அனைத்துக் கருவிகளையும் இசைக்கவும் சந்தர்ப்பம் கொடுத்து உற்சாகப்படுத்தல்.
- ஒவ்வொரு குழுவினரும் செய்த புத்தளிப்புக் கருவிகளை இசைக்கச் சந்தர்ப்பம் கொடுத்தல்.
- ஒவ்வொரு குழுவினரும் அவதானித்து மற்றைய குழுக்களின் செயற்பாடுகளை விவரிக்க சந்தர்ப்பம் அளித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. சூழலில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு புத்தளிப்புக் கருவிகளை ஆக்குவார்.
2. புத்தளிப்புக் கருவிகளை இசைப்பார்.
3. சல்லாரி, மேளம் போன்ற கருவிகளின் ஒலியைப் புத்தளிப்புக் கருவிகளின் மூலம் எழுப்பலாம் எனத் தெரிந்து கொள்வார்.

**செயற்பத்திரம்**

புத்தளிப்புக் கருவிகளை ஆக்கி இசைக்குக.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.1 சிறுவர் பாடல்களை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.1.1 "இசை பயில்வோம் சுருதி லயமுடனே" என்ற சங்கராபரண இராகப் பாடலைப் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஆர்மோனியம்
- ஒலிப்பதிவுக்கருவி
- பாடல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- சங்கராபரண இராகத்தில் "இசை பயில்வோம்" என்ற பாடலைப் (சுருதி, இராக தாளத்துடன்) பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

## படி 3.1.1.1 :

- பாடல் அட்டையைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் வாசித்துக் காட்டுதல்.
- ஆசிரியர் பாடலை முழுமையாகப் பாடிக்காட்டுதல் அல்லது ஒலிப்பதிவுக் கருவியில் போட்டுக்காட்டுதல்.
- மாணவர்கள் பாடலை முழுமையாக வாசித்தல்.
- ஆசிரியர் பகுதி பகுதியாகச் ஸ்வர சாகித்தியத்துடன் சொல்லிக் கொடுத்தல்.
- தாளத்துடன் சொல்லிக் கொடுத்தல்.
- மாணவர்களைத் தாளத்துடன் பாடச் செய்தல்.
- ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பாடுதல்.

## படி 3.1.1.2 :

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துப் பாடச் செய்தல்.
- ஒவ்வொரு குழுவும் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்தல்.

## படி 3.1.1.3 :

- ஒவ்வொரு குழுவும் பாடச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஒவ்வொரு குழுவும் அவதானித்த விடயங்களைச் கூறச் சந்தர்ப்பம் வழங்குதல்.

- சுருதி, தாளம் தவறிப் பாடிய மாணவர்களைத் திருத்திப்பாட பயிற்சி வழங்குதல்.
- மீள வலியுறுத்தும் வகையில் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து இராக தாளத்துடன் பாடலை முழுமையாகப் பாடுதல்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

1. "இசை பயில்வோம்" என்ற பாடலின் இராக தாளத்தைக் குறிப்பிடுவார்.
2. பாடலை ஸ்வர சாகித்தியத்துடன் பாடுவார்.

### சிறுவர் பாடல்
### "இசை பயில்வோம்"

இராகம் : சங்கராபரணம்<br>
தாளம் : ஆதி

ஆரோஹணம் : ஸரிகமபதநிஸ்<br>
அவரோஹணம்: ஸ்நிதபமகரிஸ } 29வது மேள இராகம்

இயற்றியவரர் : பொன் ஸ்ரீ வாமதேவன்

ஸ ரி கம பா தநி | ஸ் ஸ் நி த | பா ; ||

இ சை பயில் வோம் ஸ்ருதி ல ய முட னே

ஸ் நி ஸ்ப தப மக | கா கம | க ரி ஸா ||

இ றை வனின் புகழ் மிகு கீ தம்பா டு வோ ம்

பா ப த பம க ம | ப ஸ் நி த | பா பா ||

கீ தம் வா த்யம் ரண்டும் | சங் கீ . த மா கும்

தா நி ஸ் நி த பப | கரி பம | கரி ஸா ||

ஏ முஸ்வ ரங் க ளால் .. | இசை உரு வா கும்

பாடலை சீராய் | நடத் திடும் | தாளம் ||

தாளத்தின் அங்கங்கள் | லகு த்ருதம் | அனுத்ருதம் ||

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.2 தேசிய கீதத்தை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.2.1 தேசிய கீதத்தைப் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** :

- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- தேசிய கீதம்
- எழுதப்பட்ட பாடல் அட்டை
- பாடல் எழுதப்பட்ட நூல்
- ஒலிப்பதிவுக்கருவி
- ஒலிப்பதிவு நாடா
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :

- தேசிய கீதம் நாட்டின் பெருமையைக் கூறும் பாடல் என்பதைக் கூறுவார்.
- நாட்டின் பெருமையை மதித்து இசையோடு அதனைப் பாடுவார்.
- தேசிய ஒருமைப்பாடு என்ற எண்ணத்தைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 3.2.1.1 :**

- தேசிய கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- சுதந்திரதின விழா மற்றும் பாடசாலையின் முக்கிய நிகழ்வின் போதும் பாடப்படும் எனக் கூறுதல்.
- தேசிய கீதத்தை சிங்கள மொழியில் இயற்றியவர் கலாசூரி ஆனந்த சமரக்கோன் என்றும் தமிழில் அதனை மொழி பெயர்த்தவர் முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி என்றும் கூறுதல்.
- தேசிய கீதத்தின் இராகம் ஹமீர்கல்யாணி தாளம் சதுஸ்ர ஏகம் எனக் குறிப்பிடுதல்.
- தேசிய கீதம் பாடும் போது நிமிர்ந்து நின்று கைகளை நேராக வைத்துப் பாடவேண்டும் என்பதைக் கூறுதல்.
- பாடல் அட்டை / பாடல் எழுதப்பட்ட நூலைக் காட்சிப்படுத்தி ஒலிப்பதிவுக் கருவியில் வாத்தியங்கள் மூலம் இசைக்கப்பட்ட தேசிய கீதம் சிங்கள மொழி, தமிழ் மொழியில் தேசிய கீதத்தை இசைக்க வைத்து மாணவரைச் செவிமடுக்கச் செய்தல்.
- ஆசிரியர் பாட மாணவர் பாடுதல்.

**படி 3.2.1.2 :**

- மாணவர்களைத் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாக்கிப் பாடப் பிரதி / நூலை வழங்குதல்.
- குழு நிலையில் மாணவர் பயிற்சி பெறலும் தேவையான இடத்தில் குழுக்களை நெறிப்படுத்துலும்.
- குழுக்களின் ஆற்றுகை பற்றி கலந்துரையாடுதல்.

**படி 3.2.1.3 :**

- ஒவ்வொரு குழுவும் தேசிய கீதத்தைப் பாட சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்களும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளித்தல்.
- மீளவலிறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- இராக தாளத்துடன் முழுமையாக ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தேசிய கீதத்தின் இராக தாளத்தைக் குறிப்பிடுவார்.
2. தேசிய கீதத்தை சிங்கள மொழியில் இயற்றியவரினதும் தமிழில் மொழி பெயர்த்தவரினதும் பெயர்களைக் குறிப்பிடுவார்.
3. தேசிய கீதத்தின் ஊடாக நாட்டின் பெருமை சிறப்பு, வாழ்த்து என்பவற்றை அறிந்து கூறுவர்.
4. தேசிய கீதம் பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
5. தேசிய கீதம் பாடும் போது கடைப்பிடிக்க வேண்டிய முறைமையை காண்பிப்பார்.
6. தேசிய கீதத்தைச் சரியான முறையில் இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

- சகல குழுவினர்க்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக.
- தேசிய கீதத்தை இராக தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- தேசிய கீதத்தை இராக தாளத்துடன் பாடுக.

## இலங்கை தேசிய கீதம்

**இணைப்பு :**

இராகம் - ஹமீர் கல்யாணி
தாளம் - ஏகம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள், யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ வள வயல் நதி மலை மலர்
நறுஞ் சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே -

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாமும் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.3 நாட்டார் பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.3.1 "மண்ணை நம்பி" என்ற பாடலை இராக தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பாடல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- "மண்ணை நம்பி ..." என்ற விவசாயப் பாடலின் பொருளை விளக்குவார்.
- பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 3.3.1.1 :**
- மாணவர்கள் ஏற்கெனவே கேட்டு இரசித்திருந்த நாட்டார் பாடல்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- பாடல் அட்டையை காட்சிப்படுத்தி "மண்ணை நம்பி ..." என்ற பாடலை இராக தாளத்துடன் பாடிக்காட்டி மாணவரை அவதானிக்கச் செய்தல்.
- பாடலை சிறு பகுதியாகப் பாடிக்காட்டி மாணவரைப் பாட வழிப்படுத்தல்.
- பாடலின் தாளம் ஆதி, திஸ்ர நடை என்பதை போட்டுக் காட்டி மாணவரைத் தனியாகத் தாளத்தினைப் போட வைத்தல்.
- பாடலோடு தாளத்தினையும் சேர்த்துப் பாடிக்காட்டி மாணவர்களையும் தாளத்துடன் பாட வழிப்படுத்தல்.
- மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியரும் பாடலை இராக தாளத்துடன் பாடுதல்.

**படி 3.3.1.2 :**
- மாணவர்களைத் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாக்கிப் பாடலின் பிரதியை வழங்கிப் பாடிப் பயிற்சி பெற வழிகாட்டுதல்.
- குழுக்கள் செயற்படுவதை அவதானித்தல்.

**படி 3.3.1.3 :**
- ஒவ்வொரு குழுவும் பாட, ஏனைய குழுக்கள் கருத்துக் கூறச் சந்தர்ப்பமளித்தல்.
- சுருதி தாளம் விலகிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குதல்.

- மீளவலியுறுத்தும் வகையில் ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து இராக தாளத்துடன் பாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. "மண்ணை நம்பி ..." என்ற பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் என்ன என்பதைக் கூறுவார்.
2. "மண்ணை நம்பி ..." என்ற பாடலின் பொருளை விளக்குவார்.
3. பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

இணைப்பு

## நாட்டார் பாடல்
## மண்ணை நம்பி

விவசாயப் பாடல் (அரிவு வெட்டுப்பாடல்)
தாளம் - ஆதி (திஸ்ர நடை)

ஸ்வரஸ்தானங்கள் - ஸட்ஜம், சதுரிஷபம், சா. காந்தாரம், சு. மத்திமம், சது தைவதம், கை. நிஷாதம்

பாத பஸ்ா ;, தபா | பபப பபா | ; ; ; ||
மண்ணை நம்பி . . . . . உழுது வைச்சி . . . .

ஸாரி ஸமா ; , ரிஸா | ஸஸஸ ஸஸா | ; ; ; ||
மழையை நம்பி . . . . வெத வெதச்சு . . .

ஸாம மமா ஸாம மமா | பாத பா, | ,; பபா ||
உன்னை நம்பி நாமி ருப்போம் சாமியே. . உழவர்

பாப பமம மரிரி ரிஸஸ | ஸஸஸ ஸஸா | ஸா ;;; ||
மண்ணை நம்பி இருக்கு திந்தப் பூ. மி யே . . . . .

ஸரிக ரிஸா ஸரிக ரிஸா | ஸரிக ரிஸா | ஸா ; ;; ||
தந்தன தானா தந்தன தானா தந்தன தானா னே . . .

பாப ஸ்ஸா ஸ்ரிக ரீஸ்ா | பாப ஸ்ாஸ் | ஸ்ரிக் ரிஸ்ா||
காடு வெட்டிக் கழனி செய்து கஷ்டப் பட்டு வெத வெதச்சு

பாப ஸ்ஸா நிநிநி தபா | பதநி பா , | ;பாபா ||
கதிர் மணியாய் சிரிக்கு திங்கே பாருங்கடா | இந்த

பமம மகக கரிரி ரிஸஸ | ஸஸஸ ஸஸா | ;;; ||
களத்து மேட்டி லே அறுத்துப் போடுங் கடா . . .

(தந்தனதானா)

நெற்றி வேர்வை நீர் பாய்ச்சி நெஞ்சு நோவை உரமாக்கி
கஞ்சியோடு கலப்பை தூக்கி நின்றோமே - இங்கு
களிப்புடனே கதிரை வெட்ட வந்தோமே

(தந்தனதானா)

| | | |
|---|---|---|
| கோபுரத்துச் | சீமானுக்கும் குடிசை வாழும்மக்களுக்கும் | |
| சோறு போட்டுக் | காட்டும் கூட்டம் நாங்கடா சும்மா | |
| ஏறுநடை | போட்டு ஓடி வாங்கடா | (தந்தனதானா) |

**தேர்ச்சி** : 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் "சங்கீதம்" பற்றி விளக்குவோம்.

**பாடவேளைகள்** : 03

**தர உள்ளீடுகள்** :
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- சங்கீதம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- சங்கீதம் பயிலுவதால் நற்பண்புகளைப் பெறலாம் என்பதைக் கூறுவார்.
- சங்கீதத்தின் சிறப்பம்சங்களை விளக்கிக் கூறுவார்.
- மனித வாழ்க்கையில் சங்கீதம் முக்கிய இடத்தினைப் பெறுகிறது என்பதைக் குறிப்பிவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 4.1.1.1 :**
- கர்நாடக சங்கீத பாடத்தினைத் தெரிவு செய்வதற்கான காரணம் பற்றி மாணவரிடம் கலந்துரையாடுதல்.
- பாடல் ஒன்றினைப் பாடிக்காட்டியோ, ஒலிப்பதிவுக்கருவி மூலம் மாணவர்களை செவிமடுக்கச் செய்தோ சங்கீதம் என்பதன் எண்ணக்கருவினை விளக்குதல்.
- சங்கீதம் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் பற்றிய கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொள்ளல்.
  - சங்கீதத்தின் சிறப்பியல்புகள்
  - சங்கீதத்தைப் பயிலுவதால் வளர்க்கப்படும் நற்பண்புகள்
  - மனித வாழ்க்கையில் சங்கீதத்தின் முக்கியத்துவம்
  - இசையால் இறைவனை அடையலாம்.

**படி 4.1.1.2 :**
- மாணவர்களைக் குழுக்களாக பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்கிச் செயற்பட வழிப் படுத்தல்.
- மாணவர்கள் செயற்படுவதை அவதானித்தல்.
- மாணவர்கள் சரியாகச் செய்வதை உறுதிப்படுத்தல்.

**படி 4.1.1.3 :**

- மாணவர் குழுக்கள் தமது விடயத்தினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஒரு குழு சமர்ப்பிக்கும் போது ஏனைய குழுக்கள் அவதானித்துக் கருத்துக்கூற இடமளித்தல்.
- ஒவ்வொரு குழுக்களும் முன்வைத்த விடயங்களை ஆசிரியர் அவதானித்து மேலும் வலியுறுத்தும் வகையில் பின்வரும் விடயங்களில் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- சங்கீதம் என்பது செவிக்கும் மனதிற்கும் இன்பத்தைத் தரக் கூடியவை.
- கீதம், வாத்தியம், என்ற இரண்டையும் உள்ளடக்கியுள்ளது.
- சங்கீதம் என்பது சிரவணகலை என்றும் காந்தர்வவேதம் என்றும் கூறப்படும்
- சங்கீதம் தெய்வீகக் கலையாகும் இதற்குச் சான்றாகச் சிவன் கையில் உடுக்கையும், சரஸ்வதி கையில் வீணையும் கண்ணன் கையில் புல்லாங்குழலும் இருப்பதைக் காணலாம்.
- வாழ்க்கையின் ஒவ்வொரு சம்பவமும் சங்கீதத்துடன் தொடர்புடையதாக இருக்கின்றது.
  உதாரணம்: தாலாட்டுப் பாடல், விளையாட்டுப் பாடல், தொழிற் பாடல், நலங்குப் பாடல், ஒப்பாரி

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. சங்கீதம் மனித வாழ்க்கையோடு இணைந்துள்ளமை பற்றிக் கூறுவார்.
2. சங்கீதம் கற்பதால் ஏற்படும் நற்பண்புகளை ஏற்றுக் கொள்வார்.
3. இசையால் இறைவனை அடையலாம் எனக் கூறுவார்.

**செயற்பத்திரம் :**

- சகல குழுக்களுக்கும் செயற்பத்திரத்தினை வழங்குதல்.
- சங்கீதம் பற்றி 10 வசனங்கள் எழுதுக.

**தேர்ச்சி** : 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் "நாதம்" பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.2 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் "நாதம்" பற்றி விளக்குவோம்.

**பாடவேளைகள்** : 03

**தர உள்ளீடுகள்** :
- நாதம் பற்றிய விளக்க அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- நாதம் என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- நாதத்தின் பிரிவுகளை விளக்கிக் கூறுவார்.
- இனிமையான ஒலி "நாதம்" எனவும் இனிமையற்ற ஒலி இரைச்சல் எனவும் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 4.1.2.1 :**
- நாதம் பற்றிய விளக்க அட்டையைக் காட்சிப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- நாதம் என்பது செவிக்கு இனிமையைக் கொடுக்கும் த்வனியாகும்.
- சங்கீதத்திற்கு ஆதாரம் நாதம் எனக் கூறுதல்.
  - நாதம் ஆஹத நாதம், அநாஹத நாதம் என இருவகைப்படும் எனக்கூறுதல்.
- மனிதனுடைய முயற்சியினால் உண்டாவது ஆஹதநாதம் என்றும், மனித முயற்சியின்றி இயற்கையாக உண்டாகும் நாதம் அநாஹத நாதம் என்றும் விளக்குதல்.

**படி 4.1.2.2 :**
- மாணவர்களைக் இரு குழுக்களாக் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டை அவதானித்தல்.
- ஒவ்வொரு குழுவினதும் செயற்பாட்டினை உறுதிப்படுத்தல்.

**படி 4.1.2.3 :**
- ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளித்தல்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**
1. நாதத்தின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
2. நாதத்தின் இரு பிரிவுகளையும் கூறுவார்.
3. ஆஹத நாதம், அநாஹத நாதம் பற்றிய வேற்றுமையை குறிப்பிட்டுக் கூறுவார்.
4. அவற்றுக்குரிய உதாரணங்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம்**

சகல குழுக்களுக்கும் செயற்பத்திரத்தினை வழங்குக.

- நாதம் என்றால் என்ன?
- நாதத்தின் வகைகளை விளக்கி அவற்றுக்கு உதாரணங்கள் தருக.

**தேர்ச்சி** : 4.0 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.3 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் “சுருதி” பற்றி விளக்குவோம்.

**பாடவேளைகள்** : 03

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- தம்புரா
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- “சுருதி” என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சுருதிக்காகக் பயன்படும் வாத்தியங்களைக் கூறுவார்.
- சுருதியின் இரு பிரிவுகளையும் விளக்குவார்.
- சுருதி சேர்க்கும் ஸ்வரங்களைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 4.1.3.1 :**

- சுருதி என்றால் ஒரு பாடலைப் பாடுவதற்கு அடிப்படையாக உள்ள ஒலி என்பதை விளக்கிக் கூறுதல்.
- சுருதி, பஞ்சம சுருதி, மத்திம சுருதி என இரு வகைப்படும். (ஸபஸ், ஸமஸ்)
- ஸபஸ் என்னும் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி ஸட்ஜத்தை ஆதாரஸட்ஜமாக வைத்துக் கொண்டு பாடுவது பஞ்சம சுருதி எனப்படும்.
- ஸமஸ் என்னும் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி மத்திமத்தை ஆதாரஸட்ஜமாகக் கொண்டு பாடுவது மத்திமஸ்ருதி எனப்படும் என்பதை விளக்கிக் கூறல்.
- சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியங்கள் சுருதிப்பெட்டி, தம்புரா என்பதைக் கூறுதல்.
- சுருதியைக் கேட்கப்படுவதனால் கேள்வி என்றும் அளவிட்டுக் கூறுவதால் அலகு என்றும் அழைப்பதுண்டு என்பதைக் குறிப்பிடல்.
- “சுருதி” - மாதா “லயம்” - பிதா என்பது ஸ்லோகம்.

**படி 4.1.3.2 :**

- சகல மாணவர்களுக்கும் தனித்தனியான செயற்பத்திரங்களை வழங்குதல்.
- மாணவர்களது செயற்பாட்டினை உறுதிப்படுத்தல்.

**படி 4.1.3.3 :**

- ஒவ்வொரு மாணவரும் தமது கருத்துக்களைக் கூற இடமளித்தல்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. சுருதியின் வரைவிலக்கணத்தைக் கூறுவார்.
2. சுருதி சேர்க்கப்படும் ஸ்வரங்களைக் குறிப்பிடுவார்.
3. சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியங்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம் :**

கீழ்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.

- சுருதி என்றால் என்ன?
- சுருதியின் இரு பிரிவுகளையும் தருக
- சுருதிக்காகப் பயன்படுத்தப்படும் வாத்தியங்களைக் குறிப்பிடுக.
- சுருதியைக் "கேள்வி" என அழைப்பதன் காரணம் யாது?
- சுருதியை "அலகு" என அழைப்பதன் காரணம் யாது?

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சங்களை வெளிக்கொணர்வார்.

**செயற்பாடு** : 5.1.1 தைப்பொங்கல் தொடர்பான சமய கலாசார நிகழ்வுகளை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- தைப்பொங்கல் தொடர்பான படங்கள்
- வாழ்த்து மடல்கள்
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- டிமைன்தாள்
- நிறப் பேனாக்கள்
- வெவ்வேறு நிறங்களில் அமைந்த பிரிஸ்டல் அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- தைப்பொங்கல் விழாவின் முக்கியத்துவத்தினைக் கூறுவார்.
- தமிழர் பண்பாட்டினையும், சமய கலாசார விழுமியங்களையும் அறிந்து பேணும் மனப்பாங்கை வெளிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 5.1.1.1 :**

- தமிழர்களின் பண்டிகைகள் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுதல்.
- தைப்பொங்கல் விழா பற்றி மாணவருடன் கலந்துரையாடல். தைப்பொங்கல் வாழ்த்து மடலைப் பயன்படுத்தல்.
- தைப்பொங்கல் தொடர்பான பாடல்களைப் பாடிக்காட்டியோ அல்லது ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தோ பாடலின் உள்ளடக்கம் பற்றி மாணவர்களுடன் வினவிக் கலந்துரை யாடல்.
- தமிழர் திருநாள் விழா தமிழுக்குத் தைமாதம் 1 ஆம் திகதி கொண்டாடப்படும் எனக் கூறுதல்.
- சூரியனுக்கு நன்றி செலுத்தும் முகமாக இவ்விழா கொண்டாடப் படுகிறது எனக் கூறுதல்.
- உழவர்களின் விழாவாகக் கொண்டாடப்படுவதை விசேடமாகக் குறிப்பிடல்.
- தைப்பொங்கல் விழாவின் பிரதான நிகழ்வுகளாகத் தோரணம் கட்டுதல், மெழுகிக் கோலம் போடுதல், நிறைகுடம் வைத்தல், புதுப்பானையில் பொங்குதல், சூரியபகவானுக்குப்

பொங்கல் படைத்தல், குடும்ப உறவினர், சுற்றத்தாருடன் பகிர்ந்து உண்ணுதல்.

**படி 5.1.1.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை வழங்குதல்.
- மாணவர்களது செயற்பாட்டினை அவதானித்து முழுமைப்படுத்துதல்.

**படி 5.1.1.3 :**

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- எல்லாக் குழுவினரும் கருத்தினைக் கூற இடமளித்தல்.
- மீளவலியுறுத்தி கலந்துரையாடுக.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தைப்பொங்கல் விழா இடம்பெறும் திகதியைக் கூறுவார்.
2. தைப்பொங்கல் விழாவின் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுவார்.
3. உழவர் சூரியனுக்கு நன்றி செலுத்துமுகமாகத் தைப்பொங்கல் விழா கொண்டாடப் படுவதைக் கூறுவார்.
4. தைப்பொங்கல் வாழ்த்து மடல்களைத் தயாரிப்பார்.

**செயற்பத்திரம் :**

**செயற்பத்திரம்-1**

தைப்பொங்கல் தொடர்பான பாடல் ஒன்றினைப் பாடுக.

**செயற்பத்திரம்-2**

தைப்பொங்கல் வாழ்த்துமடல் ஒன்றினைத் தயாரிக்குக.

**செயற்பத்திரம்-3**

தைப்பொங்கல் விழா பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சங்களை வெளிக்கொணர்வார்.

**செயற்பாடு** : 5.1.2 புதுவருடப் பிறப்பு தொடர்பான சமய கலாசார நிகழ்வுகளை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :

- புதுவருடப் பிறப்பு தொடர்பான படங்கள்
- வாழ்த்து மடல்கள்
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- டிமைன்தாள்
- நிறப் பேனாக்கள்
- வெவ்வேறு நிறங்களில் அமைந்த பிரிஸ்டல் அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :

- புதுவருடப்பிறப்பின் முக்கியத்துவத்தினைக் கூறுவார்.
- தமிழர் பண்பாட்டினையும், சமய கலாசார விழுமியங்களையும் அறிந்து பேணும் மனப்பாங்கை வெளிக்காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

### படி 5.1.2.1 :

- தமிழர்களின் பண்டிகைகள் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுதல்.
- இந்துக்கள், பௌத்தர்களால் இவ்விழா கொண்டாடப்படும் என்பதை விளக்குதல்.
- தேசிய ஒருமைப்பாட்டை எடுத்துக்காட்டும் ஒரு விழா எனக் கூறுதல்.
- புத்தாண்டு விழாவிற்கான வாழ்த்து மடல் பற்றி விளக்குதல்.
- புத்தாண்டுக் கலாசார அம்சங்கள் அடங்கிய பாடல்களைப் பாடிக் காட்டுதல்.
- புத்தாண்டு விழா கொண்டாடப்படும் முறையினை விளக்குதல்.
- புத்தாண்டு நிகழ்ச்சி ஒன்றினை ஒளிப்பதிவு நாடாவில் போட்டுக் காட்டுதல்.

### படி 5.1.2.2 :

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தினை வழங்குதல்.
- மாணவர்களது செயற்பாட்டினை அவதானித்து முழுமைப்படுத்துதல்.

**படி 5.1.2.3 :**

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டினை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- எல்லாக் குழுவினரும் கருத்தினைக் கூற இடமளித்தல்.
- மாணவரோடு கலந்துரையாடி புதுவருடப் பிறப்பு தொடர்பான கலாசார நிகழ்வுகளை மீளவலியுறுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. புதுவருடப் பிறப்பு கொண்டாடப்படும் மாதம், திகதியைக் கூறுவார்.
2. புதுவருடப் பிறப்பின் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுவார்.
3. புதுவருட வாழ்த்து மடலினைத் தயாரிப்பார்.
4. புதுவருடப் பாடல்களை இயற்றிப் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

**செயற்பத்திரம்-1**

புதுவருடப் பிறப்பு வாழ்த்து மடலினைத் தயாரிக்குக.

**செயற்பத்திரம்-2**

புதுவருடப் பிறப்புப் பாடல் ஒன்றினை எழுதி இசையமைத்துப் பாடுக.

**செயற்பத்திரம்-3**

புதுவருடப் பிறப்பு பற்றி ஐந்து வசனங்கள் எழுதுக.

## 2ம் தவணை

**தேர்ச்சி** : 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.2 வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசையை இரசிப்பார்.

**செயற்பாடு** : 1.2.1 குழந்தைப் பருவப் பாடல்களை இரசிப்போம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்கள் எழுதப்பட்ட அட்டைகள்.
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி

**கற்றற் பேறுகள்** :
- குழந்தைப் பருவப் பாடல்களான மருத்துவிச்சிப் பாடல், தாலாட்டுப் பாடல் என்பவற்றை அவதானித்துக் கேட்டு இரசித்தவற்றைக் கூறுவார்.

### கற்றற் கற்பித்தல் செயலொழுங்கு:

### படி 1.2.1.1 :
- வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்களையும், பாடல்களையும் காட்சிப்படுத்தி இசை தொடர்புபட்டிருக்கும் சந்தர்ப்பங்களைக் கூறுதல்.
- இவற்றின் தனித்துவமான அம்சங்களான இசை, கருத்து, உணர்ச்சி, சொற்பிரயோகம் பற்றி விளக்குதல்.
- மனித வாழ்க்கையில் இசையானது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ளமை பற்றி விளக்குதல்.
- வாழ்க்கையில் பருவங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- வெவ்வேறு பருவங்களில் பாடப்படும் பாடல்களை மாணவர்களிடம் பாடிக்காட்டத் தூண்டுதல்.
- பருவப் பாடல்களை இனம் காண வழிப்படுத்துதல்.

### படி 1.2.1.2 :
- குழந்தைப் பருவப் பாடல்களான மருத்துவிச்சிப் பாடல், தாலாட்டுப் பாடல் ஆகியவற்றை ஒலிப்பதிவுக் கருவியில் அல்லது பாடிக் காட்டிச் செவிமடுக்கச் செய்தல்.
- மாணவர்கள் அவதானித்துக் கேட்ட விடயங்களை கூற வழிப்படுத்தல்.

### படி 1.2.1.3 :
- மாணவர்களின் நயத்தலை அடிப்படையாகக் கொண்டு மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளல்.
- மருத்துவிச்சிப் பாடல், தாலாட்டுப் பாடல் போன்றவை மனித வாழ்க்கையில் குழந்தைப் பருவத்துடன் தொடர்புபட்டுள்ளன.
- குழந்தை பிறந்த உடன் பாடப்படும் பாடல் மருத்துவிச்சிப் பாடல் ஆகும்.
- "ஆராரோ ஆரிவரோ" என்ற சொற்பிரயோகங்கள் தாலாட்டுப் பாடல்களில் அடங்கும்.

- இசையானது மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ளது.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. மனித வாழ்க்கையோடு இசை தொடர்புபட்டிருக்கும் விதத்தைக் கூறுவார்.
2. வாழ்க்கையில் குழந்தைப் பருவங்களில் பாடப்படும் பாடல் வகைகளைக் குறிப்பிடுவார்.
3. அவதானித்துக் கேட்ட பாடல்களில் தாம் இரசித்தவற்றைக் குறிப்பிட்டுப் பாடிக்காட்டுவார்.

**தேர்ச்சி** : 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 2.2 தத்தம் இயல்புக்கேற்ப பாடல்களை ஆக்கி அபிநயிப்பார்.

**செயற்பாடு** : 2.2.1 சிறிய பாடல்களை ஆக்கி இசையமைத்து அபிநயிப்போம்.

**பாடவேளைகள்** : 03

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பிரிஸ்டல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- பாடல்களை ஆக்கி இசையமைத்து அபிநயிப்பார்.

**கற்றற் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 2.2.1.1 :**

- முன்பு கற்ற சிறிய பாடல்களின் கருத்து, மெட்டு, தாளம் ஆகியவற்றைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- சிறிய பாடல்களைச் சிறிய தலைப்புக்களில் பாடலாக்க வழிப்படுத்துதல்.
- பாடலின் கருத்துக்கமையச் சுலபமான தாளத்தில் இசையமைக்க வழிப்படுத்துதல்.

**படி 2.2.1.2 :**

- மாணவர்களின் தொகைக்கேற்பச் சிறு குழுக்களாகப் பிரித்தல்.
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு தலைப்பு வழங்கிப் பாடலை ஆக்கம் செய்வதை ஊக்கப்படுத்துதல்.
- பாடல் சரியாக அமைக்கப்பட்டுள்ளதா என அவதானித்தல்
- பாடல்களைச் சுலபமான தாளம், மெட்டில் இசையமைக்க நெறிப்படுத்தல்.
- அப்பாடலின் கருத்தைப் புலப்படுத்தும் வகையில் அபிநயம் செய்ய வழிப்படுத்தல்.
- ஆக்கிய பாடலை இசையமைத்துப் பாடி அபிநயம் செய்தல்.
- மாணவர்களின் தொகைக்கேற்பச் சிறு குழுக்களாகப் பிரித்தல்.

**படி 2.2.1.3 :**

- ஒவ்வொரு குழுக்களினதும் ஆக்கங்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளித்தல்.
- ஒவ்வொரு குழுக்களும் அவதானித்துக் கருத்துக்களைக் கூற இடமளித்தல்.
- குறைநிறைகளைக் கூறி மாணவர்களை உற்சாகப்படுத்துதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பாடல் ஒன்றை ஆக்கம் செய்வார்.

2. சுலபமான மெட்டில் இசை ஆக்கம் செய்வார்.
3. பாடல்களின் கருத்துக்கமைய அபிநயம் செய்வார்.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.4 சிறுவர் பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.4.1 "கண்ணன் புரிந்த லீலை" என்ற பாடலை இராக தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பாடல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- "கண்ணன் புரிந்த" என்ற சிறுவர் பாடலை சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.4.1.1 :**
- மாணவர்களிடம் தெரிந்த சிறுவர் பாடல்களைக் கேட்டல்.
- பாடல் அட்டையைக் காட்சிப்படுத்திப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுதல்.
- கண்ணன் புரிந்த லீலை என்ற பாடலின் கருத்து
- பாடலின் இராகம், தாளம்
- பாடலினைப் பகுதி பகுதியாகப் பாட மாணவர் பாடுதல்.
- மாணவர்களைப் பாட வழிப்படுத்தல்.
- தாளத்துடன் பாடலைப் பாடுதல்.
- மாணவர்கள் இராக தாளத்துடன் பாட வழிப்படுத்தல்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து இராக தாளத்துடன் பாடுதல்.

**படி 3.4.1.2 :**
- மாணவர்களின் தொகைக்கேற்பச் சிறு குழுக்களாக்குதல்.
- குழுக்களுக்குப் பாடலை கொடுத்துப் பாட வழிப்படுத்தல்.
- ஒவ்வொரு குழுவையும் பாடுவதை அவதானித்தல்.

**படி 3.4.1.3 :**
- குழுக்கள் தனியாகப் பாட ஏனைய குழுக்கள் அவதானித்துக் கருத்துக்கூற வழிப்படுத்துதல்.
- சுருதி, இராக, தாளத்துடன் பாட மாணவர்களைப் பயிற்சியளித்தல்.
- இராக தாளத்துடன் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து பாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. கண்ணன் புரிந்தலீலை என்ற பாடலைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.
2. பாடலின் இராகம் தாளம் இயற்றியவர் என்பவற்றைக் கூறுவார்.
3. பாடலின் கதையைக் கூறுவார்.
4. பாடலின் இராகம், தாளம், இயற்றியவர் பெயர் என்பவற்றைக் கூறுவார்.
5. சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**இணைப்பு :**

## சிறுவர் பாடல்
## கண்ணன் புரிந்த லீலை

இராகம் - காபி தாளம் - ஏகம் (திஸ்ர நடை)
இயற்றியவர் - பிரம்மஸ்ரீ N. வீரமணிஐயர்

**பல்லவி**

கண்ணன் புரிந்த லீலை || சொல்லுவேன் கேள் ||
வண்ணப் பிருந்தாவனத்தில் || விந்தை அழகுடனே ||

**சரணங்கள்**

1. வெண்ணெய் திருடிவாயில் || மெல்ல விடுவான் ||
   விரட்டினாலே விரைவில் || ஓட்டம் பிடிப்பான் | எங்கள் (கண்ணன்)

2. இடுப்பில் குடத்துடனே || இங்கிதமாய் ||
   நடக்கும் வேளை நடுவே || வந்து குதிப்பான் | எங்கள் (கண்ணன்)

3. காட்டிடாமல் பட்சணங்கள் || கண்டுபிடிப்பான் ||
   கள்ளத்தனமாக அதை || உண்டு மகிழ்வான் | எங்கள் (கண்ணன்)

4. வண்ண வண்ண மலர்களையே || வாஞ்சையுடனே ||
   எண்ணி எண்ணி இங்கிதமாய் || எறிந்து விடுவான் | எங்கள் (கண்ணன்)

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.5 பாடசாலைக் கீதத்தை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.5.1 பாடசாலைக் கீதத்தைப் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- ஒலிப்பதிவுக் கருவி
- ஒலிப்பதிவு நாடா
- பாடல் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- பாடசாலைக் கீதம் பாடசாலையின் பெருமையைக் கூறும் பாடல் என்பதை எடுத்துக் கூறுவார்.
- பாடசாலைச் சூழலின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் மதித்து இசையோடு அதனைப் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.5.1.1 :**
- பாடசாலைக் கீதத்தைப் பாடும் சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- காலைக்கூட்டம், கலைவிழா இல்ல விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா போன்ற நிகழ்ச்சிகளின் ஆரம்பத்திலோ அல்லது முடிவிலோ பாடப்படுதல்.
- பாடசாலைக் கீதத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் குறிப்பிடுதல்.
- பாடசாலைக் கீதத்தில் பாடசாலையின் பெருமை, வரலாறு, சிறப்பு பற்றிக் கூறப்பட்டிருக்கும் என்பதை உங்கள் பாடசாலைக் கீதத்திலிருந்து உதாரணங் காட்டி விளக்குதல்.
- பாடசாலைக் கீதம் பாடும் போது கைகளை நேராகப் பக்கத்தில் வைத்து நிமிர்ந்து நின்று பாடசாலைக்கு மதிப்பளிக்கும் நிலையைக் கூறுதல்.
- பாடல் அட்டையைக் காட்சிப்படுத்தி ஒலிப்பதிவுக் கருவியில் பாடசாலைக் கீதத்தை இசைக்க வைத்து மாணவரைச் செவி மடுக்கச் செய்தல்.
- ஆசிரியர் பாட மாணவர் பாடுதல்.

**படி 3.5.1.2 :**
- மாணவர்களைத் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாக்கிப் பாடற் பிரதியை வழங்குதல்.
- குழு நிலையில் மாணவர் பயிற்சி பெறச் செய்தல்.
- தேவையான இடத்தில் குழுக்களை நெறிப்படுத்துதல்.

**படி 3.5.1.3 :**

- பாடசாலைக் கீதத்தைப் பாட சந்தர்ப்பம் வழங்குதல்.
- குழுக்களின் ஆற்றுகை பற்றிக் கலந்துரையாடுதல்.
- சுருதி, தாளம் விலகிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பாடசாலைக் கீதத்தின் இராக தாளத்தைக் குறிப்பிடுவார்.
2. பாடசாலை கீதத்தைப் பாடும் சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுவார்.
3. பாடசாலைக் கீதத்தைச் சரியான முறையில் இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

சகல குழுவினருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

1. பாடசாலைக் கீதத்தை இராக தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
2. பாடசாலைக் கீதத்தை இராக தாளத்துடன் பாடுக.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.6 தேவாரத்தைப் பண்முறைக்கமையப் பாடுவார்.

**செயற்பாடு** : 3.6.1 "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தைப் பண்முறைக் கமையப் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பாடல் அட்டை
- கைத்தாளம்
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- தேவாரத்தைத் தெளிவான உச்சரிப்புடன் வாசிப்பார்.
- பாடலின் பொருளைக் கூறுவார்.
- தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் கூறுவார்.
- பாடலை உரிய பண்ணுடன் தாளத்தோடு பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

## படி 3.6.1.1 :
- பாடல் அட்டையைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் பாடலை வாசித்துக் காட்டுதல்.
- மாணவர்கள் வாசித்துக் காட்டுதல்.
- தேவாரத்தின் பண், இராகம், தாளம், அருளியவர், சந்தர்ப்பம் போன்ற விடயங்களைக் கூறுதல்.
- ஆசிரியர் பாடலைப் பாடிக்காட்டுதல்.
- பகுதி பகுதியாகச் சொல்லிக் கொடுத்தல்
- தாளத்துடன் சொல்லிக் கொடுத்தல்
- ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பாடுதல்.

## படி 3.6.1.2 :
- மாணவர்களைத் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாக்கிப் பாடலின் பிரதியை வழங்கிப் பாடிப் பயிற்சி பெற வழிகாட்டுதல்.

- குழுக்கள் செயற்படுவதை அவதானித்தல்.

**படி 3.6.1.3 :**

- ஒவ்வொரு குழுவும் பாட, ஏனைய குழுக்கள் கருத்துக்கள் கூறச் சந்தர்ப்பமளித்தல்
- சுருதி, தாளம் விலகிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தேவாரத்தின் பண், இராகம், தாளம், அருளியவர் பெயர் என்பவற்றைக் கூறுவார்.
2. தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பத்தைக் கூறுவார்.
3. தேவாரத்தைப் பண் முறைக்கேற்ப தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம் :**

- தோடுடைய செவியன் என்ற தேவாரத்தைப் பண்முறைக்கேற்பத் தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- தோடுடைய செவியன் என்னும் தேவாரத்தைப் பண்முறையோடு தாளத்துடன் பாடுக.

## தேவாரம்

பண் : நட்டபாடை
இராகம் : கம்பீரநாட்டை
தாளம்: ரூபகம்

அருளியவர் : திருஞானசம்பந்தர்
தலம் : திருப்பிரமபுரம்

ஆ: ஸகமபநிஸ்
அ:ஸ்நிபமகஸ
} 36 இன் ஜன்னியம்

தோடு டையசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடு டையசுட லைப்பொடி பூசிஎன் உள்ளங் கவர்கள்வன்
ஏடு டையமல ரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடு டையபிர மாபுரம் மேவிய பெம்மா னிவனன்றே

கா மா- பா பா பா பா || ப ம நி ப - ப ம - க ப ம க ஸா | கா மா - பா பா - ப ப மா || ம பா -; ; , ப ம க ஸ ||
தோ டு - டை ய செ வி || ய ன் வி - டை - யே றி யோர் | தூ வெண் - ம தி - சூ . . | டி . . . . . . . . ||

கா மா-பா பா பா ப நி || நிஸ்நிபபம - க ப ம க ஸா || கா மா - பா பா - ப ப ம க . . || கமபநி - ஸ்நிபம - கமகஸ ||
தோ டு-டை ய செ வி || யன்வி-டை - யே றி யோர் || தூ வெண் - ம தி - சூ . . || டி - ; ; - . . . . ||

மகமா- ப நி நீ ஸ்ா ஸ்ா ||ஸ்ா, ஸ் - ஸ்ா-ஸ் க் ஸ் நி பா || ப நி நி ஸ் - நி பபா - பமமா | க ம ப நி-ஸ்நிபமகமகஸ ||
கா-டு - டை ய சு ட || லைப்- பொ, டி - பூ . சி . என் || உள் ளங் . .கவர் - கள் || வன் -; ; - . . . . ||

கா மா - பா பா பா பா || ப ம நி ப - பம - க ப ம க ஸா || கா மா - பாபா - ப ப ம க . . || ம பா ; ; , ப ம க ஸ ||
ஏ டு - டை ய ம ல || ரா ன் மு - னை - நாட் ப - ணிந் || தேத் த அருள் - செய் - - || த -; ; - . . . . ||

கா மா-பா பா பா ப நி || நிஸ் நி - ப - பம - க ப ம க ஸா ||கா மா - பாபா - ப ப ம க . . || மகபம - நிப - ஸ்நிபமகஸ||
ஏ டு - டை ய ம ல || ரா ன் மு - னை - நாட் ப - ணிந் ||தேத் த அருள் - செய் - - || த -; ; - . . . . ||

காமா- பநிநீஸ்ாஸ்ா |ஸ்ா- ஸ் - ஸ்ா - ஸ் க் ஸ் நி ஸ் பா|| ப நி நி ஸ் - நி - பபா--பமமா || க மபநி- நிப-ஸ்நிபமகஸ||
பீடு- டை ய பிர || மா -- பு ரம் - மே - வி . ய|| பெம் மா - னி வன் னன் || றே - .. - . . . . ||
கா ; - ஸா ; ; ;
. . . . . . . . . .

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | : | 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| **செயற்பாடு** | : | 4.1.4 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் ஸ்வரம் பற்றி அறிவோம். |
| **பாடவேளைகள்** | : | 03 |

**தர உள்ளீடுகள் :**
- சப்த ஸ்வர விளக்க அட்டை,
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- வயலின்
- பியானோ
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள் :**
- ஸ்வரம் என்னும் பதத்தினை விளக்குவார்.
- ஸ்வரங்களின் பெயர்களையும் தமிழ்ப் பெயர்களையும் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

### படி 4.1.4.1 :
- சப்த ஸ்வரங்களின் பெயர்களைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் விளக்குதல்.
- வாத்தியங்களில் வாசித்துக் காட்டுதல்.
- ஸ்வரத்தின் வரைவிலக்கணத்தைக் கூறுதல்.
- ஸ்வரங்களின் வடமொழிப் பெயர் தமிழிசைப் பெயர்களை குறிப்பிடுதல்.

### படி 4.1.4.2 :
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவினரதும் செயற்பாட்டை உறுதிப்படுத்துதல்.

### படி 4.1.4.3 :
- தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஏனைய குழுக்கள் அவதானித்து கருத்துக்கள் கூற இடமளித்தல்.
- பிழைகளைத் திருத்தி நிவர்த்தி செய்க.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ஸ்வரம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.

**செயற்பத்திரம் :**

சகல குழுவினருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

- ஸ்வரம் என்றால் என்ன?
- ஸ்வரத்தின் வடமொழி, தமிழ்மொழிப் பெயர்களை எழுதுக.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | : | 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களை விளக்குவார். |
| **செயற்பாடு** | : | 4.1.5 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் ஆரோஹண அவரோஹணம் பற்றி அறிந்து கொள்வோம். |
| **பாடவேளைகள்** | : | 03 |
| **தர உள்ளீடுகள்** | : | • ஆரோஹண அவரோஹண வரைபடங்கள்<br>• சுருதிப்பெட்டி<br>• செயற்பத்திரம் |
| **கற்றற் பேறுகள்** | : | • ஆரோஹண அவரோஹணத்தை இனம் காண்போம்.<br>• ஸ்வரத் தொகுதிகளில் ஆரோஹண அவரோஹணத்தை வகைப்படுத்துவார். |

**கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 4.1.5.1 :**

- ஆரோஹண அவரோஹண வரைபடம் ஒன்றைக் காட்சிப்படுத்துதல்.
- அந்த இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தை ஆசிரியர் பாடிக்காட்டுதல்.
- ஸ்வரங்கள் படிப்படியாகச் சுருதியில் கூடிச் செல்லுதல் ஆரோகணம் என்றும் சுருதியில் குறைந்து செல்லுதல் அவரோஹணம் என்றும் விளக்குதல்.
- ஆரோஹணக் கிரமத்தில் வரும் ஸ்வரத் தொகுதிகளைக் கூறுதல்.
- அவரோஹணக் கிரமத்தில் வரும் ஸ்வரத் தொகுதிகளைக் கூறுதல்.
- ஆரோஹணத்தின் மறுபெயர்கள், அவரோஹணத்தின் மறுபெயர்கள் என்பவற்றை விளக்குதல்.

**படி 4.1.5.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டைச் செய்திடச் சந்தர்ப்பம் அளித்தல்.

**படி 4.1.5.3 :**

- ஏனைய குழுக்கள் அவதானித்துக் கருத்துக்கள் கூற இடமளித்தல்.
- குறை நிறைகளை நிவர்த்தி செய்தல்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளல்

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. ஆரோஹண அவரோஹணத்தின் இலட்சணத்தைக் குறிப்பிடுவார்.
2. அவற்றின் மறுபெயர்களைக் கூறுவார்.
3. ஆரோஹண அவரோஹணம் பாடும் முறையை விளக்குவார்.

**செயற்பத்திரம் :**

ஒவ்வொரு குழுவினருக்கும் இச் செயற்பத்திரத்தை வழங்குக.

- ஆரோஹண அவரோஹணக் கிரமத்தில் வரும் ஸ்வரங்களை எழுதுக.
- ஆரோஹண அவரோஹண வரைபடத்தினை வரைக.
- ஆரோஹண அவரோஹணத்தின் மறுபெயர்களைக் கூறுக.

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாக் கொண்டு சமூக கலாச்சாரப் பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சங்களை வெளிக்கொணர்வார்.

**செயற்பாடு** : 5.1.3 வெசாக், றம்ழான் தொடர்பான கலாசார நிகழ்வுகள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** :
- வெசாக் பக்திக் கீதங்கள்
- இஸ்லாமிய கீதங்கள்
- விளக்கப் படங்கள்
- வாழ்த்து மடல்கள்
- வெசாக் கூடு
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- டிமைன் தாள்
- நிறப் பேனாக்கள்
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- வெசாக் பண்டிகையின் முக்கியத்துவத்தினை விளக்குவார்.
- றம்ழான் பண்டிகையின் முக்கியத்துவத்தினை விளக்குவார்.
- பௌத்த, முஸ்லீம் மத மக்களின் பண்பாட்டினையும் விழுமியங்களையும் வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 5.1.3.1 :**

- பௌத்த, முஸ்லீம் மக்களின் பண்டிகைகள் பற்றி மாணவர்களிடம் கலந்துரையாடுதல்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகச் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளல்.

– வெசாக் பண்டிகை பௌத்த மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
– வெசாக் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்திப் பண்டிகையின் பிரதான நிகழ்வுகளைக் கூறுதல்.
– பந்தல்கள் அமைத்துப் புத்தரின் போதனைகளைப் பரப்புதல்.
    - வெசாக் கூடுகள் அமைத்துப் தொங்க விடுதல்.
    - வெசாக் விளக்குகள் அமைத்தல்.
    - அன்னதானம் வழங்குதல்
    - மாதிரி வாழ்த்து மடல்கள் தயாரித்தல்

- றம்ழான் பண்டிகையானது இஸ்லாமிய மத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
- றம்ழான் பண்டிகைகள் தொர்பான படங்களைக் காட்சிப்படுத்துதல்.
- பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிடுதல்.
    - வருடத்திற்கு ஒருமுறை நோன்பு நோற்றல்
    - சம்பிரதாய தர்மங்கள்
    - விசேட சமய ஆராதனை அல்லது தொழுகை
    - புதுப்பிறை காணல்
    - பகிர்ந்துண்ணல்.
- வாழ்த்து மடல்களைக் காட்டி றம்ழான் வாழ்த்து மடல்களில் இடம் பெறக் கூடிய விடயங்களைக் கூறுதல்.

**படி 5.1.3.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- மாணவர் தமது செயற்பாட்டில், முழுமையாகச் செயற்படுகிறார்களா? என்பதை அவதானித்து, முழுமைப்படுத்துதல்.

**படி 5.1.3.3 :**

- ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஒரு குழுவின் சமர்ப்பணம் தொடர்பாக ஏனைய குழுக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வெசாக், றம்ழான் பண்டிகைகளின் முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுவார்.
2. வெசாக், றம்ழான் பண்டிகைகள் எம்மதத்தவர்களாற் கொண்டாடப்படுகிறது என்பதைக் கூறுவார்.
3. வாழ்த்து மடல்களைத் தயாரிப்பார்.

**செயற்பத்திரம் :**

**படி -1**

- வெசாக் பண்டிகை பற்றி 10 வசனங்கள் எழுதுக.

**படி -2**

- றம்ழான் பண்டிகைகள் பற்றி 10 வசனங்கள் எழுதுக.

**படி -3**

- வெசாக் வாழ்த்து மடல் ஒன்றைத் தயாரிக்குக.

அல்லது

வெசாக் தொடர்பான நிகழ்வுகளை விளங்கும் வகையில் சித்திரம் வரைக.

**படி -4**

- றம்ழான் வாழ்த்து மடல் ஒன்றைத் தயாரிக்குக.

அல்லது

றம்ழான் தொடர்பான நிகழ்வுகளை விளக்கும் வகையிற் சித்திரம் வரைக.

## 3ம் தவணை

**தேர்ச்சி** : 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.2 வாழ்க்கைச் சம்பவங்களோடு தொடர்புடைய இசையை இரசிப்பார்.

**செயற்பாடு** : 1.2.2 வளர்ந்தோர் பருவப் பாடல்களை இரசிப்போம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் படங்கள்
- பாடல்கள் எழுதப்பட்ட அட்டைகள்
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி

**கற்றற்பேறுகள்** :
- வளர்ந்தோர் பருவப் பாடல்களான ஊஞ்சற் பாடல்.
- விளையாட்டுப் பாடல் தொடர்பாக அறிந்து கொள்வார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 1.2.2.1 :**
- வாழ்க்கைச் சம்பவங்களைச் சித்திரிக்கும் ஊஞ்சற் பாடல், விளையாட்டுப்பாடல் அடங்கிய படங்களையும், பாடல்களையும் காட்சிப்படுத்தி இசை தொடர்புபட்டிருக்கும் சந்தர்ப்பங்களை கலந்துரையாடுதல்.
- இவற்றின் தனித்துவமான அம்சங்களான இசை, கருத்து, உணர்ச்சி, சொற்பிரயோகம், தாளம் பற்றி விளக்குதல்.
- மனித வாழ்க்கையில் இசையானது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்துள்ளமை பற்றி விளக்குதல்.
- வாழ்க்கைப் பருவங்கள் பற்றி மாணவர்களிடமிருந்து கேட்டுக் கலந்துரையாடுதல்.
- அப்பருவங்களில் பாடப்படும் பாடல்களை மாணவர்களே பாடிக்காட்டுமாறு தூண்டுதல்.
- வளர்ந்தோர் பருவப் பாடல்களை இனங்காண வழிப்படுத்துதல்.
  ஊஞ்சற் பாடல் திருமணங்களிலும் கோவில்களிலும் விளையாட்டுக்களிலும் பாடப்படுவது.
- இசையானது மனித வாழ்க்கையில் பிறப்பு முதல் இறப்புவரை பின்னிப் பிணைந்துள்ளது என விபரித்தல்.
- வளர்ந்தோர் பருவப் பாடல்களான ஊஞ்சல் விளையாட்டுப் பாடல்களை ஒலிப்பதிவுக் கருவியிலோ அல்லது பாடிக்காட்டியோ செவிமடுக்கச் செய்தல்.

**படி 1.2.2.2 :**
- மாணவர்கள் அவதானித்துக் கேட்ட விடயங்களை கூற இடமளித்தல்.

**படி 1.2.2.3 :**
- மாணவர்களின் நயத்தலை அடிப்படையாகக் கொண்டு மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**
1. மனித வாழ்க்கையோடு இசை தொடர்புபட்டிருக்கும் விதத்தைக் கூறுவார்.
2. வாழ்க்கையில் வளர்ந்தோர் பருவங்களில் பாடப்படும் பாடல் வகைகளைக் குறிப்பிடுவர்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** | : | 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 2.3 இசை தொடர்பான தேடல்களை முன்வைப்பார். |
| **செயற்பாடு** | : | 2.3.1 இசை தொடர்பான வெளிக்களப் புத்தகம் ஒன்றினைத் தயாரிப்போம். |
| **பாடவேளைகள்** | : | 02 |
| **தர உள்ளீடுகள்** | : | • இசை சம்பந்தமான படங்கள் - இசைக்கருவிகளின் படங்கள் வாக்கேயகாரர்கள், இசைக் கலைஞர்களின் படங்கள், சஞ்சிகைகள் (சிறுவர் பாடல்கள், இசைக் கச்சேரிகளின் படங்கள்)<br>• வெளிக்களப் புத்தகம் தயாரிப்பதற்கான உபகரணங்கள் - தாள்கள் (வெள்ளை நிறத்தாள், ஏனைய நிறத்தாள்கள்) கத்தரிக்கோல், பசை, ஸ்ரேப்ளர் போன்றவை. |
| **கற்றற் பேறுகள்** | : | • சுய ஆக்கங்களைத் தயாரிப்பதற்கான தகவல்களைப் பெற்றுக் கொள்வார்.<br>• வெளிக்களப் புத்தகம் ஒன்றினைத் தயாரிப்பார். |

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 2.3.1.1 :**

- மாதிரி வெளிக்களப் புத்தகம் ஒன்றினை மாணவர்களுக்குக் காட்டுதல்.
- வெளிக்களப் புத்தகத்தின் அமைப்பு பற்றி விளக்குதல்.
- வெளிக்களப் புத்தகம் தயாரிப்பதற்கான பொருட்களைக் கூறுதல்.
- வெளிக்களப் புத்தகம் தயாரிப்பதற்குத் தேவையான விடயங்கள், தகவல்களைச் சேகரித்தல் போன்வற்றைக் கலந்துரையாடல் மூலம் விளக்கிக் கூறுதல்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவினரும் சேகரிக்க வேண்டிய விடயங்களைக் கூறுதல்.
- சேகரித்தவற்றை வகுப்பறையில் செயற்படுத்துவதற்குக் கொண்டு வரும்படி அறிவுறுத்தலை வழங்குதல்.

**படி 2.3.1.2 :**

- ஏற்கெனவே வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, மாணவர்களால் கொண்டு வரப்பட்ட விடயங்களைப் பயன்படுத்தி, வெளிக்களப் புத்தகத்தினை ஆக்குவதற்கு ஒவ்வொரு குழுவினரையும் நெறிப்படுத்தல்.
- ஒவ்வொரு குழுவினரும் தாம் கொண்டு வந்த தகவல்களை நேர்த்தியாக ஒழுங்குபடுத்துவதை அவதானித்தல்.
- ஒவ்வொரு குழுவினரும் வெளிக்களப் புத்தகத்தினை முறையாகத் தயாரிக்கின்றனரா என்பதை உறுதிசெய்தல்.
- வெளிக்களப் புத்தகம் அழகாகவும், கவர்ச்சியாகவும் இருப்பதற்கு வழிப்படுத்தல்.

**படி 2.3.1.3 :**

- ஒவ்வொரு குழுவினரும் தயாரித்த வெளிக்களப் புத்தகத்தினை வகுப்பறையில் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவினரதும் தொகுப்பினை ஏனைய குழுக்களும் அவதானித்துத் தமது கருத்துக்களை முன்வைக்க இடமளித்தல்.
- எல்லாக் குழுவினரதும் ஆக்கங்களையும் அவதானித்து ஆசிரியர் தேவையான இடத்தில் திருத்தங்களை மேற்கொள்ளல்.
- தயாரித்த வெளிக்களப் புத்தகங்களைக் காட்சிப்படுத்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. வெளிக்களப் புத்தகம் தயாரிப்பதற்கு இசை தொடர்பான படங்கள், சஞ்சிகைகள், உபகரணங்கள் அவசியம் என்பதைக் குறிப்பிடுவார்.
2. வெளிக்களப் புத்தகத்தை நேர்த்தியாகவும், தரமுடையதாகவும் தயாரிப்பார்.
3. வெளிக்களப் புத்தகத்தை அழகாகவும், கவர்ச்சியாகவும் ஆக்குவார்.

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.7 அப்பியாசகான வகை உருப்படிகளை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.7.1 ஸ்வரவரிசை 1, 2 ஐ மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்வோம்.

**பாடவேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பாடல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- அப்பியாசகான வரிசையில் ஸ்வர வரிசை ஆரம்ப அப்பியாசவரிசை என்பதைத் தெரிந்து கொள்வார்.
- மாயாமாளவ கௌளை இராகத்திலும் ஆதிதாளத்திலும் ஸ்வரஸ்தான சுத்தத்துடன் 3 காலங்களிலும் பாடுதல்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.7.1.1 :**
- பாடல் அட்டையைக் காட்சிப்படுத்தி ஆசிரியர் ஸ்வர வரிசையின் இராகம், தாளம், ஆரோகண அவரோகணம் இயற்றியவர் என்பவற்றைக் கூறுதல்.
- ஆசிரியர் 1 ஆவது, 2 ஆவது ஸ்வர வரிசையை முழுமையாகப் பாடிக் காட்டுதல்.
- மாயாமாளவ கௌளை இராகத்தின் ஆரோகண அவரோகணத்தை ஆசிரியர் பாட மாணவர் பாடுதல்.
- ஆசிரியர் பகுதிபகுதியாக ஸ்வர வரிசையைச் சொல்லிக் கொடுக்க மாணவர் பாடுதல்.
- ஆசிரியர் தாளத்தோடு பாட மாணவர் பாடுதல்.
- ஸ்வர வரிசைகளை மூன்று காலங்களிலும் தாளத்துடன் பாடுதல்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து இராக தாளத்துடன் 3 காலங்களிலும் பாடுதல்.

**படி 3.7.1.2 :**
- மாணவர்களைக், குழுவாகவோ எழுமாற்றாகவோ தெரிந்து, பாடச் செய்தல்.
- ஸ்வரஸ்தானம், சுருதி, தாளம் பிழையின்றிப் பாட வழிப்படுத்துதல்.
- சுருதி, தாளம் தவறிப் பாடும் மாணவர்களுக்குப் போதிய பயிற்சி வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. ஸ்வர வரிசையின் இராகம், தாளம், இயற்றிவர் பெயர் என்பவற்றைக் கூறுவார்.
2. ஸ்வரஸ்தான சுத்தத்துடன் சுருதி இராக தாளத்தோடு மூன்று காலங்களிலும் பாடுவார்.

## ஸ்வர வரிசைகள்

இராகம் :- மாயாமாளவகௌளை
தாளம் :- ஆதி

ஆ :- ஸரிகமபதநிஸ்
அவ:- ஸ்நிதபமகரிஸ

15 வது மேளகர்த்தா ராகம்

இயற்றியவர் :- ஸ்ரீ புரந்தரதாஸர்

| | $\|_4$ | 0 | 0 | |
|---|---|---|---|---|
| 1) | ஸரிகம \| | பத \| | நிஸ் | \|\| |
| | ஸ்நிதப \| | மக \| | ரிஸ | \|\| |
| 2) | ஸரிகம \| | ஸரி \| | கம | \|\| |
| | ஸரிகம \| | பத \| | நிஸ் | \|\| |
| | ஸ்நிதப \| | ஸ்நி \| | தப | \|\| |
| | ஸ்நிதப \| | மக \| | ரிஸ | \|\| |

}

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.8 சிறுவர் பாடலை இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.8.2 "அன்பு நிறைந்த பாட்டி" என்ற சிறுவர் பாடலை இராக தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 04

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பாடல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- தரப்பட்ட பாடலைப் பொருளுணர்ந்து இராக தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

**படி 3.8.2.1 :**
- மாணவர்கள் கேட்டு இரசித்த சிறுவர் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடி இப்பாடலைப் பாடிக் காட்டுதல்.
- பாடலின் இராகம் தேஷ், தாளம், சதுஸ்ர ஏகம், திஸ்ர நடை எனக் கூறுதல்.
- ஆசிரியர் முழுமையாகப் பாடலைப் பாடிக் காட்டுதல்.
- பகுதி பகுதியாகப் பாடலைச் சொல்லிக் கொடுத்தல்.
- இராக தாளத்துடன் பாட வழிப்படுத்துதல்.
- ஆசிரியரும் மாணவர்களும் இராக தாளத்துடன் சேர்ந்து பாடுதல்.

**படி 3.8.2.2 :**
- மாணவர்களின் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாகப் பிரித்தல்.
- பாடலைக் குழுக்களாகப் பாட வழிப்படுத்தல்

**படி 3.8.2.3 :**
- அறிவுறுத்தலுக்கேற்பச் செயற்பாட்டினை சமர்ப்பிக்க சந்தர்ப்பமளித்தல்
- ஒவ்வொரு குழுவினரும் அவதானித்த விடயங்களைக் கூறச் சந்தர்ப்பம் அளித்தல்.
- சுருதி, தாளம் தவறிப் பாடும் மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. பாடலின் இராக, தாளத்தைக், குறிப்பிடுவார்.
2. இராக தாளத்துடன் பாடலைப் பாடுவார்.
3. பெரியோரை மதித்து நடக்கும் மனப்பாங்கைப் பெற்றுக் கொள்வார்.

# சிறுவர் பாடல்

## அன்பு நிறைந்த பாட்டி

இராகம் :- தேஷ்
தாளம் :- ஏகம் (திஸ்ரநடை) இயற்றியவர்- திருமதி. கோகிலா மகேந்திரன்

அன்பு நிறைந்த பாட்டி - என்னை
அணைத்துத் தூக்கும் பாட்டி
இன்ப மான கதைகள் எல்லாம்
எனக்குச் சொல்லும் பாட்டி

வாழைப் பழமும் இனிப்பும் எனக்கு
வாங்கித் தந்த பாட்டி
தோளிற் கிடத்தி முதுகைத் தடவித்
தூங்க வைக்கும் பாட்டி

பள்ளிக் கூடப் பாடம் வீட்டிற்
படிக்கச் சொல்லும் பாட்டி
துள்ளிக் குதித்து மண்ணில் வீழ்ந்தால்
துடைத்துக் கழுவும் பாட்டி

கோவிலு க்குச் செல்லும் போது
கூட்டிச் செல்லும் பாட்டி
கும்பிடு நீ தம்பி என்று
குனிந்து சொல்லும் பாட்டி

அப்பா அம்மா அடிக்க வந்தால்
அலறித் தடுக்கும் பாட்டி
தப்பாய் நானும் தவறு செய்தால்
தானே புலம்பும் பாட்டி

ஔவைப் பாட்டி பாடித் தந்த
ஆத்தி சூடிப் பாட்டை
செவ்வையாகப் பாடச் சொல்லி
சிந்தை மகிழும் பாட்டி

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.9 தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.9.1 "வாழ்க நிரந்தரம்" என்ற தமிழ் மொழி வாழ்த்துப் பாடலை இராக தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- தமிழ்மொழி வாழ்த்து எழுதிய பாடல் அட்டை
- ஒலிப்பதிவுக் கருவி
- ஒலிப்பதிவு நாடா
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- தமிழ்மொழி வாழ்த்து தமிழ் மொழியின் சிறப்பினைக் கூறுகிறது என்பதைக் கூறுவார்.
- தமிழ்மொழி வாழ்த்து பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
- தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை இசையுடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 3.9.1.1 :**
- தமிழ்மொழி வாழ்த்துப் பாடல் பாடப்படும் சந்தர்ப்பங்களை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- தமிழ்மொழி வாழ்த்துப் பாடலின் இராகம், தாளம், இயற்றியவர் சுப்பிரமணிய பாரதியார் என்ற விவரங்களைக் குறிப்பிடுதல்.
- பாடப்படும் போது நிற்க வேண்டிய நிலையினைக் கூறுதல்.
- பாடலை ஒலிப்பதிவுக் கருவியில் போட்டுக்காட்டி அவதானிக்கச் செய்தல்.
- ஆசிரியர் பகுதி பகுதியாகச் சொல்லிக் கொடுத்தல்.
- மாணவர் சேர்ந்து பாடுதல்.
- தாளத்துடன் சொல்லிக் கொடுத்தல்
- ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பாடுதல்.

**படி 3.9.1.2 :**
- மாணவர்களைத் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாக்குதல்.
- பாடற் பிரதியை அல்லது நூலைப் பயன்படுத்துதல்.
- குழு நிலையில் மாணவர்களை பயிற்சி பெறச் செய்தல்.
- தேவையான இடத்தில் குழுக்களை நெறிப்படுத்துதல்.

**படி 3.9.1.3 :**
- குழுக்களை ஆற்றுகைப்படுத்தச் செய்தல்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களைக் கூற இடமளித்தல்.
- தனித்தனியாக பாடச் செய்து தவறுகளைத் திருத்துதல்.
- மீள வலியுறுத்தும் வகையில் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து இராக தாளத்துடன் பாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தமிழ்மொழி வாழ்த்தின் இராக தாளத்தைக் குறிப்பிடுவார்.
2. தமிழ்மொழி வாழ்த்தை இயற்றியவர் பெயரைக் கூறுவார்.
3. தமிழ்மொழி வாழ்த்தின் சிறப்பினைக் கூறுவார்.
4. பாடப்படும் சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுவார்.
5. தமிழ்மொழி வாழ்த்தினைச் சரியான முறையில் இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம்**

சகல குழுவினருக்கும் இச்செயற்பத்திரத்தை வழங்குக

- தமிழ் மொழி வாழ்த்தினை இராக தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்க.
- தமிழ்மொழி வாழ்த்தினை இராக தாளத்துடன் பாடுக.

**இணைப்பு**

**தமிழ்மொழி வாழ்த்து**

இராகம் :- மாண்டு　　　　இயற்றியவர் - சுப்பிரமணிய பாரதியார்
தாளம் :- ஆதி

தான தனத்தன தான தனத்தன தானன தனத்தான

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

2. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழிய வே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே!

3. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

4. வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

**தேர்ச்சி** : 3.0 இசை உருப்படிகளை இராக தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.10 நாட்டார் பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு** : 3.10.1 "லக்கை லாலாக்கை" என்ற நாட்டார் பாடலை இராக தாளத்துடன் பாடுவோம்

**பாடவேளைகள்** : 05

**தர உள்ளீடுகள்** :
- சுருதிப்பெட்டி
- ஹார்மோனியம்
- பாடல் அட்டை

**கற்றற் பேறுகள்** :
- "லக்கை லாலாக்கை" என்ற பாடலின் பொருளை விளக்குவார்.
- பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.
- கிராமிய சொற்பிரயோகங்களை அறிந்து கொள்வார்.
- பிரதேச வாரியான கலாச்சாரப் பண்புகளை அறிந்து கொள்வார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

## படி 3.10.1.1 :

- மாணவர்கள் ஏற்கனவே கேட்டு இரசித்திருந்த நாட்டார் பாடல்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- "லக்கை லாலாக்கை" என்ற பாடலை இராக தாளத்துடன் பாடிக் காட்டி மாணவரை அவதானிக்கச் செய்தல்.
- பாடலைச் சிறு பகுதிகளாகப் பாடிக்காட்டி மாணவரைப் பாட வழிப்படுத்தல்.
- பாடலைத் தாளத்துடன் பாடிக்காட்டி, மாணவர்களை தாளத்துடன் பாட வழிப்படுத்தல்.
- மாணவர்களுடன் சேர்ந்து, ஆசிரியரும் பாடலை இராக தாளத்துடன் பாடுதல்.

## படி 3.10.1.2 :

- மாணவர்களைத் தொகைக்கேற்பச் சிறிய குழுக்களாக்கிப் பாடலின் பிரதியை வழங்கிப் பாடிப் பயிற்சி பெற வழிகாட்டுதல்.
- குழுக்கள் செயற்படுவதை அவதானித்தல்.

## படி 3.10.1.3 :

- ஒவ்வொரு குழுவும் பாட ஏனைய குழுக்கள் கருத்துக்கூறச் சந்தர்ப்பமளித்தல்.
- சுருதி, தாளம் விலகிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குதல்.
- மீள வலியுறுத்தும் வகையில் ஆசிரியரும், மாணவரும் சேர்ந்து தாளத்துடன் பாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. "லக்கை லாலாக்கை" என்ற பாடல் பாடப்படும் சந்தர்ப்பம் என்ன என்பதைக் கூறுவார்.
2. "லக்கை லாலாக்கை" என்ற பாடலில் வரும் கிராமிய சொற் பிரயோகத்தைக் கூறுவார்.
3. பாடலை இராக தாளத்துடன் பாடுவார்.

## நாட்டார் பாடல்
## மாவு இடித்தற் பாடல்

இராகம் : வலஜி
தாளம் : சதுஸ்ர ஏகம்
ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், அந்தர காந்தாரம், பஞ்சமம் சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்
இயற்றியவர் : S. சிவஞானராஜா

பா கா ஸ ஸ கா || பா கா ஸ ஸ கா ||
லக் கை லா லாக் கை || லக் கை லா லாக் கை ||
பா கா ஸ ஸ கா || பா கா ஸ ஸ க ப ||
லக் கை லா லாக் கை || லக் கை லா லாக் கை உ ||
பா ஸ்ா ; ; || ஸ்ா பா ; ; ||
லக் கை ; ; போ டு ; ;
கா ஸா ; ; ||
போ டு ; ;

ப ப க க ஸ ஸ க க || ப ப க க ஸ ஸ க க ||
போடு போடு நல்லாய் போடு பவுத்தி ரமாய் வைச்சுப் போடு
ப ப க க ஸ ஸ க க || ப ப க க ஸ ஸ க க ||
கோலத் திற்கு கொஞ்ச மா வு வறுத்தெ டுக்க கொஞ்ச மாவு
ப ப க க ஸ ஸ க க || ப ப க க ஸ ஸ க க ||
அப்பத் திற்கு கொஞ்ச மா இடி யப்பத்திற்கு கொஞ்ச மாவு
பா ஸ்ா ; ; || ஸ்ா பா ; ; ||
போ டு ; ; போ டு ; ; ||
கா ஸா ; ;

(லக்கை லாலாக்கை)

2. நீ த பா ஸ க ப || நீ த பா ; , ||
நீ த பா கொஞ்சம் நீ த பா ; , ||
நீ த பா ஸ க ப || நீ த பா ; , ||
நீ த பா கொஞ்சம் த(ண்) நீ த பா . . .
ஸ க பக ஸ க ப க || ஸக ப க ஸ க ப க ||
பச்ச ரிசி பச்ச ரிசி பச்ச ரிசி பச்ச ரிசி ||
பா ஸ்ா ; ; || ஸ்ா பா ; ; ||
போ டு ; ; போ டு ; ; ||
கா ஸா ; ;
போ டு . .

ப ப க க ஸ ஸ க க || ப ப க க ஸ ஸ க க ||
பாக்கு வெத்திலை எல்லிப் போல பச்சைப் பாக்கு எல்லிப் போல
ப ப க க ஸ ஸ க க || ப ப க க ஸ ஸ க ப ||
நாக்கி றுக்க எல்லிப் போல நல்லாவைச்சுப் பொத்தித்தாஉ ||
பா ஸ்ா ; ; || ஸ்ா பா ; ; ||
லக் கை ; ; || போ டு . .
கா ஸா ; ; ||
போடு . .

(போடு போடு நல்லாய் போடு)

3. ஸ க ப க ஸ க பக || ஸ க ப க ஸ க ப க ||
ஒண் டும் ஒண்டும் ஒண்டும் ஒண்டும் ஒண்டும் ரண்டும் ஒண்டும் ரண்டும்
ஸ க ப த நி த ப க || ப த நி த ஸ் நி த ப||
ஒண் டும் ரண்டும் மூன்றும் ஒண்டும் ரண்டும் மூன்றும் நா லு மே உ
பா ஸ்ா ; ; || ஸ்ா பா ; ; ||
லக் கை. . போ டு ; ;
கா ஸா ; ; ||
போடு ; ;

பா கா ஸ ஸ கா || பா கா ஸ ஸ கா ||
லக் கை லா லாக் கை லக் கை லா லாக் கை
பா கா ஸ ஸ கா || பா கா ஸ ஸ கப ||
லக் கை லா லாக் கை லக் கை லா லா கை
பா ஸ்ா ; ; || ஸ்ா பா ; ; ||
லக் கை . . போ டு . .
கா ஸா ; ; ||
போ டு ; ;

4. , ஸ் க்ஸ் ஸ் நி நி ஸ் || க்ா ஸ்ா ; ; ||
, மச் சா னே அள்ளிக் கொட்டு ஏ ஹே ; ;
, ஸ் க் ஸ் ஸ் நி நி நி || ஸ்ா பா ; ; ||
, மா னம் பூ வெள்ளிப் பந்தல் ஓ ஹோ ; ;
, ஸ் க்ஸ் ஸ் நி நி ஸ் || க்ா ஸா ; ; ||
, அச் சாறை ஊத்தி வைக்க ஏ ஹே . .
, ஸ் க்ஸ் ஸ் நி நி நி || ஸ்ா பா ; ; ||
, அம் பனைக்கு மதியம் போலப் போ வோம் ; ;
, ஸ் க்ஸ் ஸ் நி நி நி || க்ா ஸ்ா ; ; ||
, கூவில் ப ணங் கட் டி யும் ஏ ஹே ; ;
, ஸ் க்ஸ் ஸ் நி நி ஸ் ஸ்ா பா ; ; ||
, கூத் த பிரான் எ ள் ளு ப் பா கு ஓ ஹோ . .

, ஸ் க் ஸ் ஸ் நி நி ஸ் || ஸ்க்க் க்ஸ் ஸ்நி நிஸ் ||
, வா யி லே தேன்கு டிக் க வருத்தம் வந்தால் தேன்குடிக்க
, ஸ் க் க்ஸ் ஸ் நி நி ஸ் || ஸ் க் ஸ் நிஸ்நி ப க கஸ
. வட்டுக் கோட்டைப் பாக்கெடுத்து நறுக்கி நறுக்கி வையுங்கடி

(லக்கை லாலாக்கை)

**தேர்ச்சி** : 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் தாளம் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.6 தாளம் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- தாளம் பற்றிய விளக்கப்பட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- தாளம் என்றால் என்ன எனக் கூறுவார்.
- தாளத்தில் வரும் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
- தாள அங்கங்களின் செய்கை முறையைப், போட்டுக் காண்பிப்பார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.1.6.1 :**

- மாணவர்களிடம் தாளம் பற்றி வினவுதல்.
- பின்வரும் விடயங்கள் பற்றிக் கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- பாட்டின் கால அளவு மாறுபடாமல் கையினாலோ அல்லது கருவியினாலோ தட்டுதல் தாளம் ஆகும்.
- சங்கீதத்திற்கு தாளம் தந்தையைப் போன்றது.
- தாளத்தில் லகு, துருதம், அனுத்துருதம் என மூன்று அங்கங்கள் உள்ளன.
- அவற்றின் குறியீடுகள்

  லகு - 1

  துருதம் - 0

  அனுத்துருதம் - ∪
- லகு - தட்டி விரல்களை எண்ணுவது துருதம் - தட்டி வீசுதல்.
  அனுத்துருதம் - ஒருமுறை தட்டுதல்.

**படி 4.1.6.2 :**

- மாணவர்களைச் சிறு குழுக்களாக்கிச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு ஏற்றவாறு செயற்படுவதை வழிப்படுத்துதல்.

**படி 4.1.6.3 :**

- ஒவ்வொரு குழுவும் செயற்பட ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்துக் கருத்துக்கூற இடமளித்தல்.
- பிழையான கருத்துக்களைத் திருத்தி மீண்டும் தாளம் பற்றி விளக்கமளித்தல்.
- விடயங்களை மீளவலியுறுத்தும் வகையில் தாளம் பற்றிய விளக்கத்தை மாணவரோடு கலந்துரையாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. தாளம் என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
2. தாளங்களின் அங்கங்களைக் குறிப்பிடுவார்.
3. அங்கங்களின் செய்கைமுறையைப் போட்டுக் காட்டுவார்.

**செயற்பத்திரம்**

- தாளம் என்றால் என்ன?
- தாளத்தில் எத்தனை அங்கங்கள் உண்டு?
- லகுவின் அங்கக் குறியீடு, அதன் செய்கை முறை யாது?
- துருதத்தின் அங்கக் குறியீடு, அதன் செய்கை முறை யாது?
- அனுதுருதத்தின் அங்கக் குறியீடு, அதன் செய்கை முறை யாது?

**தேர்ச்சி** : 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 4.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில் திஸ்ரநடை, சதுஸ்ர நடை பற்றி விளக்குவார்.

**செயற்பாடு** : 4.1.7 திஸ்ர, சதுஸ்ர நடைகள் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- திஸ்ர, சதுஸ்ர நடைகள் எழுதப்பட்ட விளக்க அட்டைகள்
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- திஸ்ர நடை என்றால் என்ன எனக் கூறுவார்.
- சதுஸ்ர நடை என்றால் என்ன எனக் கூறுவார்.
- திஸ்ர நடையின் ஜதியைக் கூறுவார்.
- சதுஸ்ர நடையின் ஜதியைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

**படி 4.1.7.1:**
- மாணவர்களிடம் தாளத்தின் நடைகள் பற்றி வினவுதல்.
- பின்வரும் விடயங்கள் பற்றி கலந்துரையாடலை மேற்கொள்ளுதல்.
- தகிட என்ற ஜதிச் சொற்களைக் கொண்டது திஸ்ர நடை இதன் எண்ணிக்கை 3
- தகதிமி என்ற ஜதிச் சொற்களைக் கொண்டது சதுஸ்ரநடை. இதன் எண்ணிக்கை 4
- திஸ்ர, சதுஸ்ர நடைகளில் அமைந்த பாடல்களைப் பாடி மாணவர்க்கு விளக்குதல்.

**படி 4.1.7.2 :**
- மாணவர்களைச் சிறு குழுக்களாக்கிச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பத்திரத்திற்கு எற்றவாறு செயற்படுவதை வழிப்படுத்துதல்.

**படி 4.1.7.3 :**
- ஒரு குழு செயற்பட ஏனைய குழுக்கள் அவதானித்துக் கருத்துக் கூற இடமளித்தல்.
- பிழையான கருத்துக்களை திருத்தி மீண்டும் திஸ்ர, சதுஸ்ர நடை பற்றி விளக்கமளித்தல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. திஸ்ர சதுஸ்ர நடையின் ஜதிகளைக் கூறுவார்.
2. அதன் எண்ணிக்கைகளைக் கூறுவார்.
3. திஸ்ர, சதுஸ்ர நடைகளைப் போட்டுக் காட்டுவார்.

**செயற்பத்திரம் -**

**(1)**
- திஸ்ர நடை என்றால் என்ன?
- அதன் ஜதி யாது?
- திஸ்ர நடையை போட்டுக் காட்டுக.

**(2)**
- சதுஸ்ர நடை என்றால் என்ன?
- அதன் ஜதி யாது?
- சதுஸ்ர நடையை போட்டுக் காட்டுக.

**தேர்ச்சி** : 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம் பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 சமய கலாசார நிகழ்ச்சிகள் தொடர்பான கலை அம்சங்களை வெளிக்கொணர்வார்.

**செயற்பாடு** : 5.1.5 நத்தார் பண்டிகை தொடர்பான கலாசார நிகழ்வுகள் பற்றிக் கூறுவோம்.

**பாடவேளைகள்** : 02

**தர உள்ளீடுகள்** :
- நத்தார் பாடல்கள்
- நத்தார் பண்டிகைகள் தொடர்பான படங்கள்
- மாதிரி நத்தார் வாழ்த்து மடல்கள்
- டிமைத்தாள்
- நிறப் பேனாக்கள்
- ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற் பேறுகள்** :
- நத்தார் பண்டிகை தொடர்பான கலை அம்சத்தை வெளிக்கொணர்வார்.
- நத்தார் பண்டிகை தொடர்பான இசை, நடனம், நாடகம், சித்திரம் தொடர்பான விளக்கத்தைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு:**

## படி 5.1.5.1 :

- சமய கலாசார நிகழ்ச்சிகளுள் ஒன்றான நத்தார் பண்டிகை பற்றி பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுதல்.
- நந்தார் பண்டிகையானது கிறிஸ்தவ மதத்தவர்களால் மார்கழி மாதம் 25 ஆம் திகதியன்று கொண்டாடப்படுகிறது.
- அன்றைய நாள் இயேசு பாலனின் பிறந்த நாளாகும்.
- நத்தார் பண்டிகைக் காலத்தில் இயேசு பிறப்பின் பாடல்களைப் பாடுவார்கள். இப்பாடல்கள் "கரோல் கீதம்"என அழைக்கப்படும்.
- நத்தார் பண்டிகை தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்தி இப்பண்டிகையின் பிரதான நிகழ்வுகளைக் குறிப்பிடுதல்.
    - நத்தார் அலங்காரங்கள்
    - நத்தார் மரம்
    - நத்தார் தாத்தா
    - தேவாலயத்திற்குச் செல்லுதல்
    - கரோல் கீதங்கள் பாடுதல்
    - நத்தார்தின நடன, நாடகங்களைக் குறிப்பிடுதல்..
    - குடும்பத்தினர், உறவினர், சுற்றத்தாருடன் பகிர்ந்துண்ணல்.
- மாதிரி வாழ்த்துமடல்களைக் காட்டி நத்தார் வாழ்த்துமடலில் இடம்பெறக்கூடிய விடயங்களைக் கூறுதல்.

**படி 5.1.5.2 :**

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
- ஒவ்வொரு குழுவிற்குமான செயற்பத்திரங்களை வழங்குதல்.
- மாணவர்கள் செயற்பாட்டில் சரியாக ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதி செய்தல்.

**படி 5.1.5.3 :**

- ஒவ்வொரு குழுவும் தாம் கண்டறிந்தவற்றை வெளிக்கொணரச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- குழுக்களின் கருத்தை முழுமைப்படுத்திக் கலந்துரையாடுதல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

1. நத்தார் பண்டிகையின் சிறப்பு பற்றிக் கூறுவார்.
2. நத்தார் பண்டிகையானது எம்மதத்தவர்களால் எப்போது கொண்டாடப்படுகிறது என்பதைக் கூறுவார்.
3. கரோல் கீதங்களைப் பாடுவார்.
4. நத்தார் தொடர்பான இசை, நடனம், நாடகம், சித்திரம் போன்ற அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**செயற்பத்திரம் -**

- நத்தார் பண்டிகை பற்றி 10 வசனம் எழுதுக.
- கரோல் கீதம் ஒன்றைப் பாடுக.
- நத்தார் வாழ்த்து மடல் ஒன்றினைத் தயாரிக்குக.
- நத்தார் தொடர்பான நிகழ்வுகளை விளக்கும் வகையில் சித்திரம் வரைக.
- நத்தார் பண்டிகையை விளக்கும் சிறு நாடகம் ஒன்றை நடித்துக் காட்டுக.